# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



**ஸ்ரீ காஞ்சி**
**மஹா ஸ்வாமிகளின் அருளுரை**
**தெய்வத்தின் குரல் 3ம் பாகம்**
**அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்**
**இது தான் அச்வமேதம்**

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***


Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**



# வேதபாரதி
**செய்திகள்**



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்**
மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இனி இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வேதமந்திரங்களையும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

**த$_1$ப$_1$ஸா ப்$_3$ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ, த$_1$போ$_1$ப்$_3$ரஹ்மேதி$_1$|**
**தை$_1$த்$_1$தி$_1$ரீயோப$_1$நிஷத்$_1$**

பொருள்:

தவத்தினால் ப்ரம்மத்தை அறிந்து கொள். தவம் தான் ப்ரம்மம்.

ஆத்ம ஞானம் அடைவதற்கு தவம் தான் முக்கிய ஸாதனம். தவத்தினால் தான் ப்ரம்மத்தை அறிய முடியும். தவத்தில் புலனடக்கம், மனவடக்கம், ஸத்குரு ஸேவை, எல்லாம் அடங்கியுள்ளன. குருவின் உபதேசங்களைச் சிந்தனை செய்து உண்மைப் பொருளை அறிவதே தவம்.

//ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி://

## வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

**மலர்: 4 இதழ்: 3**

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.



**புத்தகக் குழு**

ஸ்ரீ டி. சூரியநாராயணன்
ஸ்ரீ ஸ்ரீகாந்தன்
ஸ்ரீ G.விஸ்வநாதன், Vly
ஸ்ரீ விஸ்வநாதன், Ngr
ஸ்ரீ K. ராமன்
ஸ்ரீ மணிசங்கர்
ஸ்ரீ சங்கர்
ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி
ஸ்ரீ M.V. சுப்ரமணியன்
ஸ்ரீ K.N. பத்மநாபன்
ஸ்ரீ சாந்தா நாகராஜன்
ஸ்ரீ K. நாராயணன்
ஸ்ரீ நடராஜன்
ஸ்ரீ K. ஸ்வாமிநாதன்
ஸ்ரீ V. ஸ்ரீராம்



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| இளநீரில் விளக்கெரியும் கோயில் | 9 |
| மானஸீக பூஜை | 12 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 13 |
| சுபாஷிதம் | 15 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 16 |
| வேதபாரதி திருச்சி நிகழ்ச்சி | 19 |
| வேதபாரதி தருமபுரி நிகழ்ச்சி | 21 |
| புத்தக விமர்சனம் | 22 |
| திருப்பூரில் ஸ்வாமிகள் ஸ்ர்த்தாஞ்சலி | 29 |
| வேதபாரதி புதுச்சேரி | 30 |
| வியக்கவைக்கும் எண்கள் | 34 |
| தெரிந்து கொள்வோம் | 35 |
| பிரதக்ஷிணம் | 37 |
| தர்மத்தின் குரல் | 41 |
| பகவத் கீதை | 42 |
| வேதபாரதி ஊரப்பாக்கம் | 47 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை
மேற்கண்ட அலுவலக முகவரிக்கு
அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள்
தங்களுடைய சந்தா எண்ணைத்
தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**




# ஒரு நிமிடம் உங்களோடு

**Ego** ஆணவம், அகந்தை, அல்லது அஹங்காரம். இந்த வார்த்தையை நாம் எல்லோருமே பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்துகிறோம்.

பொதுவாக நமக்கு ஏதாவது வேண்டுமானால்தான் பகவானை வேண்டுவோம். இல்லையானால் பகவானின் ஞாபகம் வராது. தினமும் சமைக்கும்போது யாரும் பகவானை வேண்டுவதில்லை. காரணம் சமைப்பதற்கான பொருட்கள் எல்லாம் சமையல் அறையில் இருக்கிறது. ஏதாவது தேவையானால் பகவானை வேண்டுவோம். அப்போது நாம் தாழ்வானவன் பகவான் உயர்ந்தவர். இது தான் மனிதனின் கற்பனை. நம் உள்ளே உள்ள ஈகோதான் நம்மையும் பகவானையும் வேறுபடுத்துகிறது. பகவான் நம்மை விட்டு வெளியேறுவது என்பதன் சுருக்கம்தான். Ego (Ending God Out)

ஈகோ உள்ளவர்கள் எப்போதும் தன்னைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். இவர்களிடம் சுயநலம், வறட்டுக் கௌரவம், உயர்வு மனப்பான்மை, தலைக்கனம், பணிவின்மை ஆகிய குணங்கள் நிறைந்திருக்கும். இவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். தம்மை நாடியே பிறர் வரவேண்டும் என்று இருப்பார்கள். தன்னைவிட மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று நினைப்பார்கள். தான்தான் சிறந்தவன் மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது என்ற எண்ணம் உள்ளவர்கள். மற்றவர்கள் தன்னை புகழவேண்டும், மதிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அடுத்தவர்கள் நிலைமையைப் பார்த்து பொறாமை படுவார்கள் இவர்கள் பேச்சில் இரக்க குணம் இருக்காது. தன்னைவிட குறைந்த படிப்பு, பதவி உள்ளவர்களிடம் அதிகம் பேச மாட்டார்கள். தவறு செய்தால் மன்னிப்பு கேட்கமாட்டார்கள். தனக்கு தோல்வி வந்துவிடுமோ என்கிற பயம் இருக்கும்.

ஒரு பெரிய நாட்டை ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் "தான்" என்ற அஹங்காரம் நிரம்பியவனாக இருந்தான். ஒரு நாள் அவன் வேட்டைக்குச் சென்றபோது ஒரு துறவியை சந்தித்தான். அவரிடம் "நான் பல நாடுகளை வென்ற சக்ரவர்த்தி, இருப்பினும் எனக்கு நிம்மதி இல்லை. எனக்கு மகிழ்ச்சி கிடைக்கவேண்டுமானால் நான் என்ன செய்யவேண்டும்?" என்று அவரிடம் கேட்டான். தியானத்திலிருந்து கண் விழித்த அந்த துறவி சற்று கோபமாக "நான் அழிந்தால்தான் உனக்கு சந்தோஷம் கிடைக்கும்" என்று கூறிவிட்டு மீண்டும் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். துறவி தன்னை அவமானப்படுத்திவிட்டார் என்று நினைத்த அரசன் கோபத்தில் துறவியை கொல்வதற்காக தன் கத்தியை உருவினான். அப்போது துறவி "அடே மூட அரசனே "நான்" என்று நான் என்னைச் சொல்லவில்லை. உன் உள்ளே இருக்கும் "நான்" என்ற அகந்தை அழிந்தால்தான் நீ மகிழ்ச்சி அடைவாய் என்று கூறினேன் என்றார்.

நம்முடைய உள்ளே உள்ள அந்த ஈகோ விலிருந்து விலகி நிற்க நமக்கு சக்தியும் பலமும் நம்மிடையே உள்ளது. நம்முடைய ரிஷிகள் கண்டுபிடித்தது "நம்முடைய ஈகோவிற்கு நிரந்தரமான இடம் நம் மனதில் கிடையாது. அது நம்முள்ளே வந்து வந்து போகிறது. ஆனால் நம்முடைய பலவீனத்தால் அந்த ஈகோ நம்மிடையே எப்போதும் ஒட்டிக்கொண்டே இருக்கிறது. ஈகோவை விட்டுவிட்டால் வாழ்வு லேசாகிவிடும். அதனால் எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஆன்மீகத்தில் ஈடுபடுகிறோமோ அவ்வளவு நாம் நம்முடைய அகந்தையிலிருந்து, அதாவது ஈகோவிலிருந்து விலகி நிற்கலாம். நம்முடைய எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம் இந்த ஈகோ தான். இதை நாம் உணர்ந்தால் அப்போது அந்த ஈகோ நம்மை விட்டு போய்விடும்.

நண்பர்களுக்குள் ஈகோ வந்தால் நட்பு கெட்டுவிடும். கணவன் மனைவிக்குள் ஈகோ வந்தால் வாழ்க்கை கெட்டுவிடும்.


இந்த "ஈகோ" என்னும் தலைக்கனம் நமக்குத் தேவையா?



# அட்டைப்பட விளக்கம்

## ஹனுமத் ஜயந்தி

ஹனுமனின் தாய் பெயர் "அஞ்சனா தேவி". தந்தையின் பெயர் "கேசரீ" (வானரத் தலைவன்) இவர்களின் குல தெய்வம் பஞ்சபூதங்களில் ஒன்றான "வாயு". இவரே ஹனுமனுக்கு தந்தையாகவும், குருவாகவும் இருந்து வழி நடத்தியதால் ஹனுமனை வாயு புத்திரர்" என்று அழைப்பார்கள். அஞ்சனா தேவியின் புத்திரர் என்பதால் "ஆஞ்சநேயர்" என்றும் அழைக்கப்படுகிறார்.



ஹனுமன் பிறந்த நாளையே நாட்டில் எல்லா கோயில்களிலும் "ஹனுமத் ஜயந்தி"யாக கொண்டாடுகிறார்கள். தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் மட்டும் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம், அமாவாசையும் மூலநக்ஷத்திரமும் கூடிவரும் நாளன்று எல்லா இந்து கோயில்களிலும், வைஷ்ணவக் கோயில்களிலும் "ஹனுமத் ஜெயந்தி" யை வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்கள். மற்ற மாநிலங்களில் வைகாசி மாதம் வளர்பிறையில் வரும் தசமி திதியன்று கொண்டாடுகிறார்கள். வைஷ்ணவர்கள் ஹனுமாரை திருமாலின் "சிறிய திருவடி" என்று போற்றுகிறார்கள்.

ஹனுமன் நித்திய பிரம்மச்சாரி. தேகபலமும், புத்தி பலமும், கொண்டவர். மகா சக்திமானாக இருந்தும் அத்தனை சக்தியும் இராமன் போட்ட பிச்சை என்று அடக்கத்தோடு தனக்கு ஒரு பதவியும் கேளாமல் இராம தாசனாக இருந்தார்.

விஸ்வரூபம் எடுத்தவர்கள் மூவர். (1) திருமால் 2) சிவபெருமான் (3) ஆஞ்சநேயர். சீதாபிராட்டியைத் தேடி இலங்கை சென்ற ஸ்ரீ ஆஞ்சநேயர் அங்கே அசோக வனத்தில் கண்ணீரும், கம்பலையுமாய் சோகமே உருவாக உருந்த

சீதாபிராட்டியைப் பார்த்தார். ஆஞ்சநேயரை சீதாபிராட்டிக்கு அடையாளம் தெரியவில்லை. ஏதோ ஒரு வானரம் என்று நினைத்தார். தான் யார் என்று காட்டுவதற்காக ஸ்ரீ ஆஞ்சநேயர் விஸ்வரூபம் எடுத்தார். அப்போதுதான். சீதை ஆஞ்சநேயரைத் தெரிந்துகொண்டு அவரை ஸ்ரீராமன் அனுப்பியதையும் அறிந்துக்கொண்டார். இலங்கையிலிருந்து சீதாபிராட்டியை வணங்கி ஹனுமன் விடை பெற்றுக்கொள்ளும்போது அவரை ஆசீர்வதிக்க அக்ஷதை ஏதும் இல்லாததால் சீதை தன் அருகில் இருந்த வெற்றிலைக் கொடியிலிருந்து ஓர் இலையைக் கிள்ளி அவர் தலையில் போட்டு ஆசீர்வதித்தார். ஆகையால்தான் ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை அணிவிக்கப்படுகிறது.

கணித மேதை இராமாநுஜர் கூறும்போது ''நான் ஆஞ்சநேய பக்தன். எனக்குப் புரியாத கணிதக் கோட்பாடுகள் இருக்கும்போது நான் ஆஞ்சநேயரைத் துதிப்பேன். உடனே சரியான விடைகள் என கண் முன்னால் பளிச்சிடுவதைக் காண்கிறேன்'' என்று கூறியுள்ளார்.

**ஸ்ரீ ஹனுமனின் மஹிமைகள் இன்னும் ஏராளம் ஏராளம்.**

இந்த வருடம் ''ஹனுமத் ஜயந்தீ'' 26.12.2019 வியாழக்கிழமை நிகழ்கிறது. அன்றைய தினம் பக்தர்கள் விரதமிருந்து ஹனுமனுக்கு வடைமாலை, துளசி மாலை, வெற்றிலை மாலை அலங்காரம் செய்து பூஜை செய்து, ஸுந்தர காண்டம் பாராயணம் செய்யலாம். மேலும் ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே, வாயு புத்ராய தீமஹி, தந்நோ ஹனுமத் ப்ரசோதயாத்'' என்ற ஹனுமன் காயத்ரி மந்திரத்தை 108 முறை உச்சரித்து சகல பாபங்களிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் நிவர்த்தி பெறுவோமாக.

அட்டைப் படத்தை அலங்கரிப்பது சென்னை, நங்கநல்லூரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்து வரும் 32 அடி உயரமுள்ள, 32 சாமுத்ரிகா லட்ஷணங்களோடு கூடிய "ஸ்ரீ விஸ்வரூப ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர்''.

தொகுப்பு

**டி.சூரியநாராயணன்**



# இளநீரில் விளக்கெரியும் குகைக்கோவில் தரிசனம்

**Dr.ஷியாமா ஸ்வாமிநாதன்**



சென்ற மாதம் 20ம் தேதி 800 ஆண்டுகளுக்கும் மேலாக பல அதிசயங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் நூறுந்து ஸ்வாமி சித்தர் ஸ்தாபித்த சிவாலய தரிசனம் கிடைத்தது.

ஒசூர் தேன்கனிக்கோட்டையிலிருந்து 25 கி.மீ தூரத்தில், செங்குத்தான மலைப்பகுதியில், அடர்ந்த வனாந்திரத்தில் அமைந்திருக்கிறது, இந்த எளிமையான, அமானுஷ்யமான, அமைதியான சித்தர் குகைக் கோவில். தமிழ்நாட்டுக்குள் இருந்தாலும் கர்நாடக மாநில மக்கள்தான் அதிகம். அதுவும் சிவன் வழிபாட்டையே பிரதானமாகக் கொண்ட லிங்காயத் இனத்தவர். கரடு முரடான பாறைகளில் என்னை பத்திரமாகப் பிடித்துக் கீழே சிறு பள்ளத்தாக்கில் இறக்கிவிட்டார்கள். சிவன் பார்வதி நந்திதேவருடன் சுதை சிற்பமாக இருந்த அந்த குறுகிய குகை, இரும்புக் கதவால் பூட்டப்பட்டிருந்தது. லிங்காயத் பூசாரி வருவதற்காகக் காத்திருந்தோம். சகல பூஜைப்பொருள்களுடன் வந்தவர், ஒரு வார்த்தை கூடப் பேசாமல் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார். அரைமணிநேரத்தில் சித்தர் சந்நிதானத்தை அலங்கரித்து எங்களை உள்ளே அழைத்தார். குறுகிய குகைக்குள் சிறு கூடம். முதுகு வளைத்து உள்ளே சென்று, இருபுறமும் அமர்ந்துகொண்டோம். மந்திரங்கள் ஏதுமில்லை. அவரிடம் எத்தகைய ஆர்பாட்டமுமில்லை. கழுத்தில் நீண்ட கயிற்றில் பெரிய சிவலிங்கம் அணிந்திருந்தார்.

கர்ப்பக்கிரகத்தின் மத்தியில் இருந்த சிவலிங்கம் வித்தியாசமாக இருந்தது. அதன் வலது பக்கத்தில், குகை சுவற்றின்

ஓரமாய் நூறுந்து சித்தரின் வெள்ளி உருவம், முகம் மட்டும் வெளியே தெரியும்படி பூக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அவருக்குப் பின்னால் சற்றே உயரத்தில் ஒரு தீபம் (அகலமான மண் அகல்) திரியிட்டு தயாராக இருந்தது. பூசாரி வந்தவர்களைப் பார்க்க, அவர் பார்வையைப் புரிந்துகொண்ட எங்களுடன் வந்திருந்த இரு லிங்காயத் இளைஞர்கள்,அப்போதுதான் வாங்கிவந்திருந்த இரண்டு இளநீரைக் கொடுக்க, அவர், அதனுள் சிறு துவாரமிட்டு இளநீரை அந்த அகலில் வடித்தார். திரியை ஏற்றினார். அமைதியாக பற்றிக்கொண்டது திரி. சடசடப்பு எதுவுமில்லை. அதுதான் இங்கே விசேஷம். அந்த இடத்தை தவிர வேறு எங்கும் இப்படி இளநீரில் தீபம் எரிவதில்லை. நிறைய சோதனைகள் செய்து பார்த்துவிட்டனர். (நீங்களும் யூடீப்பில் தேடும் இடத்தில் மூன்றாவது கண் எபிசோடு 284 என்று டைப் செய்து தரிசனம் செய்துகொள்ளுங்கள்)

தீபாராதனை தொடங்கியது. பூசாரி கற்பூர தட்டை வலது கையிலும் இடது கையில் பழக்கமான பூஜை மணிக்கு பதிலாகத் தனது மணிக்கட்டில் தொங்கவிட்டுக் கொண்டிருந்த வெண்கல உலோகத் தட்டில், வெண்கலக் குச்சி போலிருந்த ஒன்றால் வித்தியாசமான மணி ஓசையை எழுப்பினார். அதிலிருந்து பிறந்த கம்பீரமான நாதம் அந்த வனாந்திரப் பகுதி முழுவதையும் வியாபிக்கக் கூடியதாக இருந்தது.

விபூதிப் பிரசாதத்தை கையில் கொடுக்கவில்லை. நீரில் குழைக்கப்பட்டிருந்த விபூதிக் கிண்ணத்தில் தனது மூன்று விரல்களைத் தோய்த்து பக்தர்களின் நெற்றியில் பளிச்சென்று மூன்று பட்டைகளைப் பதித்தார். என்னிடம் வரும்போது ‘போடலாமா?’ என்று ஜாடையில் வினவினார். நான் பதிலளிப்பதற்குள் ‘அம்மாவுக்கு வச்சிடுங்க சாமி, நல்லா ஆசீர்வாதம் பண்ணுங்க.’ என்று லிங்காயத் இளைஞர்கள் குரல் கொடுத்தனர். அவர் என் நெற்றியில் தனது விரல்களைப் பதித்தபோது என் கண்கள் கங்கையெனப் பிரவாகம் எடுத்தது. வித்தியாசமான உணர்வு மனமெங்கும் வியாபித்திருந்தது. எல்லாம் முடிந்து மீண்டும் அந்த இளநீர் விளக்கை தரிசிக்க அது சலனமின்றி, சப்தம் எதுவுமின்றி ஆழ்ந்த அமைதியுடன் எரிந்து கொண்டிருந்தது.

குகையை விட்டு வெளியே வந்த பூசாரி, எங்களுக்கு



கன்னடம் கலந்த தமிழில் விளக்க ஆரம்பித்தார். “800 வருஷங்களுக்கு முன்னால் இங்கே ஒரு சித்தர் வாழ்ந்துவந்தார். அவர் பெயர் யாருக்கும் தெரியாது. ரொம்ப சக்தி. யாரு வந்து கஷ்டத்தை சொன்னாலும் தீர்த்துவச்சிடுவார். 21 தலைமுறையா இந்த இடத்தையும் மலைக்கு மேலே, ஊருக்குள்ள அவருடைய ஜீவ சமாதியையும் கட்டிக் காப்பாத்திகிட்டு வரோம். இந்த குகைல எங்கு அமர்ந்து தியானம் பண்ணினாரோ அங்கே தான் இளநீர் விளக்கு எரியும். அவரு காலத்துல எண்ணெய் இல்லாமல் தண்ணீரிலேயே விளக்கு ஏத்தியிருக்கார். அதுக்கப்புறம் இளநீர் விட்டு ஏத்தறது வழக்கமாயிடிச்சு. குகைக்குள்ளே வேறே இடத்துல வச்சா கூட எரியாது. அத்தனை சக்தி இன்னமும் இருந்துகிட்டிருக்கு. மேலே அவரோட ஜீவசமாதியும் அவரோட சிஷ்யர்கள் சிலரோட சமாதியும் இருக்கு.

அவருக்கு நூறுந்து ஸ்வாமின்னு பேரு எப்படி வந்தது என்ற கேள்விக்கு அவர் சொன்ன பதில் வியப்பாக இருந்தது. அவருடைய மகிமையை சோதனை செய்யும் எண்ணத்தோடு வந்த நூறு கிராமமக்கள், தங்களின் பசியைப் போக்கவேண்டும் என்று கேட்டார்கள். சுவாமியும் அவர்களை அமரச் சொல்லி, தன்னிடம் இருந்த ஒரே ஒரு களி உருண்டை பிரசாதத்திலிருந்து ஒவ்வொருவருக்காக எடுத்து பரிமாற, அது வந்து கொண்டே இருந்தது. அப்படியும் திருப்தியடையாத மக்கள், சுவாமி நீங்களும் எங்களுடன் சாப்பிடுங்கள் என்று சொல்ல அப்படியே ஆகட்டும் என்று தனக்காக ஒரு களி உருண்டையை வரவழைத்துக் கொண்டாராம். அன்றிலிருந்து அந்த நூறு பேரும் அவருடைய பக்தர்கள், சிஷ்யர்கள் ஆனார்கள். கன்னடத்தில் ’நூறு ஒந்து’ என்றால் நூற்றி ஒன்று என்று அர்த்தமாம். அதிலிருந்து இந்த இடம் ‘நூரோந்து ஸ்வாமி மலை’ என்றே அழைக்கப்படுகிறது.

அற்புத தரிசனம், அற்புத அனுபவம் அவசியம் Youtube-ல் பாருங்கள். முடிந்தவர்கள் நேரில் சென்று தரிசியுங்கள்.

வேதபாரதி ஏற்பாடு செய்தால் அனைவரும் சென்று வருவோம். அப்படியே என் ஆஸ்ரம குழந்தைகளையும் பார்க்கலாம் வாருங்கள்.

**Dr.ஷியாமா ஸ்வாமிநாதன்**

## ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகள் அருளிய
# மானஸீக பூஜையின் சிறப்பு

பாஹ்ய ஆராதனத்தில் என்ன என்ன உபசாரங்கள் செய்யப்போகிறோமோ அவ்வளவு உபசாரங்களையும் மானஸூக அர்ச்சனத்தில் செய்துகொள்ள வேண்டும். இது எல்லா ஆகமங்களுக்கும் பொது.

இப்படி, பகவத் ஸ்வரூபத்தைப் பக்தியோடு பார்க்க வேண்டும்.

இப்படி ஹ்ருதய கமலத்தில் இந்திராதி திக்பாலகர்களையும் மற்றத் தேவர்களையும் தியானித்துக்கொள்ள வேண்டும். சூரிய மண்டலத்தையும, அதன் மத்தியில் சந்திர பிம்பத்தையும், அதன் மத்தியில் அக்கினி மண்டலத்தையும் தியானிக்க வேண்டும்.

அதன் மத்தியில் நாநாவிதமான ரத்ன கசித ஸ்வர்ண பீடத்தில் பிரபாமத்யகதராகப் பரமாத்மா விளங்குவதாகத் தியானிக்க வேண்டும். இப்படி ஸ்வர்ண வர்ணராகவும் பீதாம்பரதாரியாகவும், கிரீடாதி ஆபரண பூஷிதராகவும், ஸ்ரீ வத்ஸ பூஷிதராகவும், சங்கசக்ரதாரியாகவும், வரதகடிக ஹஸ்தராகவும், கௌமோதகி முதலியவற்றைத் தரித்தராகவும் பகவானைத் தியானிக்க வேண்டும் என்ற விசேஷ உபசாரங்களை மானஸூகமாக ஸமர்ப்பிக்க வேண்டும் என்று இந்த மானஸிக அர்ச்சனையை முடித்துக்கொள்ள வேண்டும்

“பகவானே, ஹ்ருதயகத மானஸூக அர்ச்சனத்தைச் செய்தேன். இனி, பாஹ்ய அர்ச்சனையை நன்கு செய்கிறேன்” என்று பிரார்த்தித்துகொண்டு மேலே பூஜையைத் துவங்க வேண்டும்

இது எல்லாப் பாவங்களையும் போக்க வல்லது. ஆகையால் இது மிகவும் முக்கியமானது.

ந்யாஸாதிகளாலே பூஜகர் தம்முடைய சரீரத்தைப் பரிசுத்தமாகச் செய்துகொண்டு மேலே பூஜை செயவதனால் அந்தப் பூஜையின் பலனும் பரிசுத்தமாகவும் விரும்பிய முறையிலும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)



## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை
# வேதமந்திரங்களின் ஆற்றல்



ஒரு சமயம், பாரதத்தில் வசித்துக் கொண்டிருந்த எண்ணற்ற மக்கள் பலவித பாவ காரியங்களில் ஈடுபட்டு நரகத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிவபெருமான் தமது எல்லையற்ற கருணையின் காரணமாக ஸ்ரீருத்ர மந்திரத்தை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, அவர்களை நரக வேதனைகளிலிருந்து காப்பாற்றினார் . இதனால், எல்லோரும் புனித நதிகளில் நீராடி, ஸ்ரீருத்ர மந்திரத்தினால் சிவபெருமானை வழிபட்டு வந்தனர்.

இதற்கிடையில், இறப்பின் தெய்வமான யமன் கவலைப்படலானார். “இப்பொழுதெல்லாம் நரகத்திற்கு ஒருவரும் இல்லாதபோது, நரகத்தின் அதிபதி என்று மட்டும் நான் சொல்லிக் கொள்வதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது?” என்று யமன் புலம்ப ஆரம்பித்தார். பிறகு பிரம்மதேவரிடம் சென்று தமது குறைகளைக் கூறிக் கொண்டார். “எனக்குப் பிரஜைகள் யாரும் இல்லாததால், நான் ஓய்வு பெற விரும்புகிறேன்” என்று கூறினார் யமன். அதற்கு பிரம்மா, “ஸ்ரீருத்ர மந்திரத்தை மக்கள் ஜபம் செய்து செய்து, உன்னுடைய பிடியில் விழாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். இருந்தாலும், ‘அச்ரத்தா’ (அவநம்பிக்கை) என்ற தூதுவனையும், ‘துர்மேதா’ (விபரீதமான எண்ணம்) என்ற தூதுவனையும் உனக்கு அளிக்கிறேன். இவைகளினால் மக்களுக்கு ஸ்ரீருத்ர மந்திரத்தின் மேல் உள்ள விசுவாசம் குறையும். ‘பெரியவர்கள் சொல்லுவதுபோல் உண்மையில் அம்மந்திரத்திற்கு அவ்வளவு சக்தியில்லை’ என்று மக்கள் மனங்களில் தோன்றும்படி இவை செய்துவிடும். இதனால் அவர்கள் அம்மந்திரத்தினிடத்தில் வைத்திருந்த நம்பிக்கையை இழந்து, அதனைச் சரிவர ஜபிக்க மாட்டார்கள். இப்படிச் சரியாக ஜபிக்காத காரணத்தினால்

அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்தும் விடுபடமாட்டார்கள்" என்று பதிலளித்தார்.

மந்திரங்களை ஜபிக்கும்போது அவற்றை வெறுமையாக சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது என்பதை இக்கதை நமக்கு அறிவுறுத்துகிறது. மந்திரத்தின் மேல் நம்பிக்கையும், அதற்கேற்ற தகுந்த மனப்பான்மையும் ஜபிப்பவருக்கு இருப்பது மிகவும் அவசியமாகும். இவை இருந்தால், ஜபத்தின் முழுப் பயனும் தானாகவே ஜபிப்பவரை வந்தடையும்.

தொடரும்...

உ

சிவாயநமஹ

## மழலைகளின் மனதில் ஈசனின் பதிகங்கள்

அன்புடையீர்,

எல்லோரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ ஈசனை வேண்டுகிறோம். 28.12.2019 சனிக்கிழமை மாலை 4.00 மணி முதல் 5.30 மணி வரை அருள்மிகு மிருதுமுகிலகுஜாம்பிகை உடனமர் உத்தவேதீஸ்வரர் ஆலயத்தில் மழலைகளின் மனதில் ஈசனின் பதிகங்கள் என்ற தலைப்பில் கூட்டுப் ப்ரார்த்தனை (பதிகம் பாடுதல்) நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

1. 5-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை உள்ள ஆண் / பெண் இருபால் குழந்தைகளும் பெற்றோர்களுடன் கலந்துகொள்ளலாம்.
2. குறித்த நேரத்தில் கூட்டுப்பிரார்த்தனை துவங்கும்.
3. கலந்து கொள்ள விருப்பமுள்ள குழந்தைகள் 4.12.2019க்குள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொண்டு அடையாள அட்டை பெற்றுக்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
4. கூட்டுப்ரார்த்தனையில் கலந்து கொள்ளும் குழந்தைகளுக்கு அன்பான பரிசுகளும், ஈசனின் பிரசாதமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
5. வருங்கால நம் செல்வங்களின் நன்மைக்காக நடைபெறும் கூட்டுப்ப்ரார்த்தனையில் அனைவரும் கலந்து கொண்டு பேரருள் பெற்றிட அன்புடன் வேண்டுகிறோம்.

தொடர்புக்கு:

**94878 83800 / 94873 30872 / 94434 95950**



# சுபாஷிதம் - 13

"சுபாஷிதம் என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**ந காலோ தண்டமுதம்ய சிர: க்ருந்ததி கஸ்யசித்**
**காலஸ்ய பலமேதாவத் விபரீ தார்த்ததர்சனம்**

காலம், ஒருவன் தலையை ஆயுதங்களால் கொய்வதில்லை, ஆனால் சிந்தையைக் கெடுத்து விபரீதமான முடிவுகளை எடுக்கச் செய்து தவறான பாதைக்குத் தள்ளுவது அதன் வலிமை.

**யத்ர நார்ய : து பூஜ்யந்தே ரமந்தே தத்ர தேவதா:**
**யத்ர ஏதா: து ந பூஜ்யந்தே ஸர்வாஸ்தத்ர அஃபலா: க்ரியா:**

எங்கு பெண்கள் போற்றுதலுக்கும் மரியாதைக்கும் உரியவர்களாய்க் கருதப்படுகிறார்களோ அங்கு இறைவன் உறைகிறான்; பெண்கள் போற்றப்படாத இடங்களில் எதுவும் உருப்படுவதில்லை.

**யாவத் ப்ரியதே ஜடரம் தாவத் ஸத்வம் ஹி தேஹீனாம்**
**அதிகம் யோபிமன்யேத ஸ ஸ்தேனோ தண்டமர்ஹதி**

தன் தேவைகளுக்கேற்ப ஒருவன் செல்வத்தை ஆளலாம்; தேவைக்கு அதிகமாய் செல்வத்துக்கு உரிமை கொள்பவன் கள்வன்; தண்டனைக்குரியவன்

**ச்ருயதாம் தர்மஸர்வஸ்வம் ச்ருத்வா சைவாவதார்யதாம்**
**ஆத்மன: ப்ரதிகூலானி பரேக்ஷாம் ந சமாசரேத்.**

தர்மத்தின் சாரத்தைக் கேட்டு மனதில் இருத்திக் கொள்ளுங்கள். நமக்கு எது சாதகமற்றதோ, அதைப் பிறருக்குச் செய்யாதிருப்போமாக.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர
நிதிஉதவி செய்து வருபவர்

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 40

ஹிந்து மதம் கூறும் விஷயத்தை எடுத்துக் கூறும் பொழுது 'செய்த பாவத்திற்கு மன்னிப்பு என்பது கிடையாது. அதனால் பாவம் செய்யாதே, அதர்மத்தின் வழியில் செல்லாதே' என்று கூறுவது மட்டுமல்ல தொடர்ந்து எதெல்லாம் பாவம் என்றும் எடுத்துக் கூற வேண்டும்.

'மாதா, பிதா' என்பவர்கள் இறைவனுக்கு சமம் என்று கூறி புராணத்தில் 'விநாயகர் அம்மையப்பனை சுற்றிய' கதையைக் கூறுகிறது.

இந்த அறிவும், தேடுதலும் பெற்றோருக்கு இருந்தால் போதும் மெதுவாக தான் பிறந்த மண், நாடு, ஊர், வீடு, மதம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர வைக்க இயலும்.

'அவர்களை வழிக்கு கொண்டுவர 'ஸ்ட்ரிக்ட்' ஆக இருக்க வேண்டாமா' என்று கேட்கும் பெற்றோர்கள் பலர் உண்டு.

'ஸ்ட்ரிக்ட்' என்பது வேறு 'டிஸ்ஸிப்ளின்' என்பது வேறு. 'டிஸ்ஸிப்ளின்' என்றால் ஒரே வார்த்தையில், உரிய வழிக்கு வர வழி வகுக்கும் என்பது மட்டுமல்ல பெற்றோர்களும் அதைத் தொடர்ந்து தங்களுக்காகவும் வழி முறைப்படுத்த வேண்டும்.

ஒரு விஷயத்தை இன்றைய பெற்றோர்கள் மிக முக்கியமாக கவனிக்க வேண்டும். அறிவுரைகளை சுருக்குங்கள். வாழ்வியல் முறைகளை பெருக்குங்கள்.

அதாவது தேவையற்ற அறிவுரைகள் வேண்டாமே. குழந்தைகளை உட்கார வைத்து மணிக்கணக்கில் பேசி, அவர்களை குழப்புவதைவிட நீங்கள் நடந்து கொள்ளும் முறையிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்வி கேட்டு 'பதில் சொல்லும்மா' என்று கூறிவிட்டு தானே பதில் சொல்லிக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் மிக அதிகம்.

அவர்கள் பேசும் பொழுது கேட்டு, உள்வாங்கத் தயாராக



இருக்க வேண்டும். 60% மார்க் வாங்கும் குழந்தையை பேசவே விடாமல் அடுத்த வருடமே 90% மார்க் வாங்க வேண்டுமென்றால் எப்படி சாத்தியமாகும்?

கலந்தாலோசித்து, கவனமாக மார்க் பெறும் வழிகளைப் பற்றி முடிவெடுக்கும் அளவு சுதந்திரம் வேண்டும்.

இந்த சுதந்திரம் பெற முதலில் பொறுப்புணர்வு அளிக்க வேண்டும். எல்லாவற்றையும் 'மாங்கு - மாங்கு' என்று தானே செய்துவிட்டு, அவதிப்பட்டு 'பொறுப்பேயில்லை' என்று புலம்பும் பெற்றோரை நாம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

'முடியாது' (No) எனும் சொல் அர்த்தமற்று உபயோகிக்காதீர்கள். ஒரு முறை No சொன்னால் சொன்னது தான் எனும் சட்டத்தை நீங்கள் பின்பற்றுங்கள்.

மிகச் சின்ன விஷயமான "சாப்பாடு என்ன வேண்டும். ஞாயிறுக்கிழமை ஸ்பெஷல் என்ன" என்பதை அவர்களின் தீர்மான பொறுப்பை அளியுங்கள்.

ஏதாவது கூறினால் stupid 'வடிகட்டின முட்டாள்' போன்ற அர்ச்சனைகளை நிறுத்துங்ள்.

அவர்களோடு இருங்கள். ஆனால் ஒட்டி, உறவாடி விளையாட விடாமல் செய்யாதீர்கள்.

உங்கள் பணிகளிலும் அவர்கள் கருத்துக்களை கேளுங்கள். நல்லது எது செய்தாலும் தட்டிக் கொடுங்கள். தவறு செய்தால் மென்மையாக சுட்டிக்காட்டி மீண்டும் தவறு செய்யாதபடி வழி நடத்துங்கள்.

சுதந்திரமான எண்ணங்களையும், போக்குகளையும் அவர்கள் கூறும் பொழுது பயத்தினால் அதை அவசரமாக மறுக்காதீர்கள்.

அந்த கருத்தினுள் புகுந்த அது என்ன கருத்து, அது எங்கிருந்து வந்துள்ளது. அதே விஷயத்தை சனாதன தர்மம் எப்படி எவ்விதத்தில் அணுகுகிறது என்ற கூறுங்கள்.

'டீன் ஏஜ்' என்றால் பெற்றோர்களுக்கு பணி அதிகம் தானே!

யோசியுங்கள்!

தொடரும்...

# வாசகர் கடிதம்

- அகவை ஆறினை நோக்கி பயணிக்கும் அக்டோபர் மாத இதழ், கூடுதல் செய்திகளுடன் அதிக பக்கங்களைத் தாங்கி வந்திருப்பது சிறப்பு.
- அறிவோம் வேதத்தின்படி சமஸ்கிருதம், தமிழ் இரண்டையும் இரு கண்களாக போற்றுவது...
- ஒரு நிமிடம் உங்களோடு என பல நிமிடங்களை சூரியநாராயணன் அவர்கள் சிந்திக்க வைப்பது...
- நற்பாதையில் பெற்றோர்களையும், மாணவச் செல்வங்களையும் அழைத்துச் செல்லும் ஔவை விழா...
- காஞ்சி மற்றும் சிருங்கேரி பெரியவர்களின் அனுக்ரஹ பாஷணங்கள்...
- குழந்தைகள் பற்றிய பெற்றோர்களுக்கான காந்தலஷ்மி சந்திரமௌலி அவர்களின் வழிகாட்டல்...
- ஸ்வாமிகளின் குரலில் தர்மத்தின் குரல்...
- பழமொழிகள் பற்றிய தெளிவு..
- பிறப்புரிமை பற்றிய மஹா ஸ்வாமிகளின் உபதேசம்...

என பக்கத்திற்கு பக்கம் மின்னிடும் “வேதபாரதி செய்திகள்” புதுப் புதுச் செய்திகளுடன் மெருகேறுவதைக் கண்டு உள்ளம் உவகை அடைகிறது.

புத்தகக் குழுவிற்கு வாழ்த்துக்கள்.

அன்புடன்
**வெ.நடராஜன்**
*புதுச்சேரி-605 008.*

---

ஆசிரியர் அவர்களுக்கு

தாங்கள் செய்து வரும் இந்த தொண்டு மிகவும் போற்றத்தக்கது. “வேதபாரதி செய்திகள்” புத்தகம் 6வது ஆண்டில் அடியெடுத்து வைத்து மேலும் மேலும் வளர்ந்து தழைத்து ஆன்மீக செய்திகளை வாரி வழங்க வாழ்த்துகிறேன். முக்கியமாக ஆசாரியர்களின் பொன்னுரைகள் மற்றும் அந்தந்த மாத விசேஷங்களையும் படித்து, தெரிந்து, நெறிமுறைகளையும் பிரசுரிக்கிறீர்கள். தாங்களும், தங்களைச் சேர்ந்த குழுவினரின் குடும்பம் நலமுடன் வாழ வள்ளல் முருகனை ப்ரார்த்திக்கிறேன்.

**சாவித்திரி சுப்பிரமணியம்**
பழவந்தாங்கல்



## திருச்சி - வேதபாரதி

# மகான்களின் பாதையில் தர்மத்தின் குரல்

தமிழ் நாட்டின் மத்தியப்பகுதியும், இமயமலையைவிட மூத்ததுமான மலைக்கோட்டை மாநகர் நவம்பர் 8, 9,10 மூன்று நாட்களிலும் ஆன்மீக மழையில் நனைந்து மகிழ்ந்தது. காரணம் வேதபாரதியும், பத்மம் யோகா ஆராய்ச்சி மையமும் இணைந்து ஓர் அருமையான, பயனுள்ள நிகழ்ச்சியை தெப்பக்குளம் ஸ்ரீ லக்ஷ்மி கமர்ஷியல் இன்ஸ்டியூட்டில் நடத்தியது தான்.

தினமும் மாலை 6.00 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கும். 6.30 வரை யோகாப்பயிற்சி 6.31க்கு தமிழ்மயம் ஸ்ரீ ரமண பாரதி அவர்களின் “மகான்களின் பாதையில் தர்மத்தின் குரல்” என்ற தலைப்பில் ஐம்பொறிகளும் லயிக்கின்ற சொற்பொழிவு.

சிறார், இளைஞர், பெரியவர், தாய்மார்கள் என அனைத்துத் தரப்பினரும் 5.50க்கே ஆஜராயினர். திருச்சி சந்திரசேகர் வழக்கம் போல் வேதபாரதி, பத்மம் யோகா மையம் இரண்டினைப் பற்றியும் தெளிவாகப் பேசினார். இடம் தந்த லக்ஷ்மி கமர்ஷியல் நிர்வாகி மற்றும் வருகை புரிந்தோரை அன்புடன் வரவேற்றார். யோகப்பயிற்சி அளித்தார். ஸ்ரீ ரமண பாரதி அவர்கள் மேடையில் அமர்ந்து திருக்குறளை அடிமாறாமல் பதம் பிரித்து மிக அழகாகச் சொல்லி பாரத நாட்டின் மகான்களில் பாரதியார், விவேகானந்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ ராகவேந்திரர் போன்றோரின் வாழ்வு நிகழ்வுகளையும் அவர்கள் கூறிய அறிவுரைகளையும் கேட்போரை ஈர்க்கும்படிப் பேசினார்.

இரண்டாம் நாள் “திருமூலர் வாழ்வும் வாக்கும்” பற்றிப் பேசினார். முன்னதாக முதல் நாள் யோகப் பயிற்சியில் பங்கு கொண்டவர்கள் மிகவும் யதார்த்தமாக பல நாட்கள் பயிற்சி பெற்றவர்கள் போல் முறையான வரிசையில் செல்போனை நிறுத்திவிட்டு அமர்ந்ததும், பயிற்சி பெற்றதும் மிக மிக அருமை. இத்தனைக்கும் காரணம் யோகா மாஸ்டர் ஸ்ரீ சந்திரசேகர்ஜி பின்புறம் நின்று “கண்களை மூடிக்கொள்ளுங்கள் பலூன் உப்புவது போல் நினைத்துக் கொண்டு மூச்சை உள்ளே இழுங்கள். பலூன் சுருங்குவது போல நினைத்து வெளியே மூச்சை வெளியே விடுங்கள் என்றதும் பயிற்சி பெற்றோர் செய்தது மனதை நிறைத்தது.

மூன்றாம் நாள் மூச்சுப் பயிற்சியில் அ, ஆ, ஒ கார முறையில் மூச்சுப் பயிற்சி பெற்றவர்கள் உண்மையிலேயே பாக்யவான்கள். மகான்களின் வரலாற்றை உப கதைகளோடு, ஹாஸ்ய துணுக்குகளுடன் ஸ்ரீ ரமண பாரதி வெளுத்துக் கட்டினார். மூன்று நாட்களும் அங்கே 6 முதல் 8 மணி வரை PIN DROP!

மூன்று நாட்களும் பிரசங்கம் முடிந்ததும் சுண்டல் பிரசாதம் விநியோகம் நிறைவு நாளில் ஸ்ரீசந்திர சேகர்ஜி தனக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கு சால்வை போர்த்தினார். மழபாடி டைம்ஸ் ஆசிரியர் ஸ்ரீ மழபாடி ராஜாராம் இவ்வுன்னத நிகழ்வை ஏற்பாடு செய்த சந்திர சேகர்ஜிக்கும், அருமையாய் சொற்பொழிவு ஆற்றிய ஸ்ரீரமண பாரதி அவர்களுக்கும் முறையே லக்ஷ்மி இன்ஸ்டியூட் நிறுவனர் அவர்களையும், சிட்டியூனியன் பாங்க் மேலாளர் அவர்களையும் சால்வை போர்த்தி வாழ்த்தும் படி விரும்பி வேண்டிக் கொண்டார். இருவரும் மிக மிக மகிழ்ச்சியோடு சால்வை அணிவித்து மகிழ்ந்தனர்.

ஸ்ரீ சந்திரசேகர்ஜி நன்றி கூற சத்சங்கவிழா நிறைவுற்றது. அப்போது ஒருவர் வந்து "ஜி. அருமையான இது போன்ற நிகழ்ச்சியை மாதா மாதம் வைத்தால் வாழ்க்கை சந்தோஷமாக அமையும்" என்று ஜியிடம் வேண்டினார்.

"நிச்சயம்" என்றார் ஜி. கூட்டம் வெளியேற மணி 9.30 ஆனது. எந்தரோ மஹானுபாவு(லு) அந்தரிகி வந்தநமு.

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**

எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.

Cell : 94434 95950 | Email - vedabharathichennai@gmail.com



# தருமபுரி வேதபாரதி

வேதபாரதி சென்னை மற்றும் தருமபுரி சத்சங்கம் இணைந்து 3வது வருட அந்தணர் சங்கமம் நிகழ்ச்சி தருமபுரியில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாட்சி நாராயணா திருமண மண்டபத்தில் கடந்த 17.11.2019 அன்று வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

காலை சுமார் 10.30 மணிக்கு குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா தொடங்கியது. விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று வேதபாரதி தர்மபுரி அமைப்பின் செயல்வீரர் திரு. சந்திரமௌலி அவர்கள் உரையாற்றி விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்து தொகுத்து வழங்கினார்கள்.

காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை "புனிதர் புரிந்த புதுமை" என்ற தலைப்பில் மஹான்களின் சிறப்பை திருப்பாவை செம்மல் பரமக்குடி ஸ்ரீ சீனிவாஸன் அவர்கள் தொகுத்து உரையாற்றினார்கள்.

மேற்படி நிகழ்ச்சியில் சஷ்டியப்தபூர்த்தி, பீமரதசாந்தி மற்றும் சதாபிஷேகம் கண்ட 20க்கும் மேற்பட்ட தம்பதிகளுக்கு வஸ்த்ரம், தாம்பூலம் மற்றும் துளசிமாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். இளையோர் அவர்களை நமஸ்கரித்து ஆசி பெற்றார்கள்.

வேதபாரதி மாத இதழ் ஆசிரியரும், மையக்குழு முக்கிய பிரமுகருமான திரு.ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் "உறவும் நட்பும்" என்ற தலைப்பில் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கி வேதபாரதியின் பயணம் பற்றி எடுத்துரைத்தார்கள்.

விழாவில் ''வைதீக கர்மாநுஷ்டானங்களும் குடும்ப க்ஷேமமும்'' என்ற தலைப்பில் ஸ்ரீரமண பாரதி க்ருஷ்ண ஜெகந்நாதன் ஜி அவர்கள் அந்தண அன்பர்களிடம் கலந்துரையாடல் நிகழ்த்தி அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்கள்.

தர்மபுரி வேதபாரதி அமைப்பினர் காலை மற்றும் மதியம் போஜன ஏற்பாடுகளை வெகு சிறப்பாக செய்து அன்னபிரசாதம் வழங்கி அனைவரையும் கௌரவித்தார்கள். மாலையில் அனைவருக்கும் நன்றி தெரிவித்து "அந்தணர் சங்கமம்" இனிதே நிறைவு பெற்றது.

Space Sponsored by

**SRI KALRAJ, (Ret) AEE., TNEB**

Manthoppu, Dharmapuri.




புத்தக விமர்சனம்

# இலங்கையில் இராமாயணத் தேடல்



**(டாக்டர் ஷ்யாமா சுவாமிநாதன்)**

"இலங்கையில் இராமாயணத் தேடல்". இது ஒரு பயணக் கட்டுரை. இதன் ஆசிரியர் டாக்டர் ஷ்யாமா சுவாமிநாதன். இந்த புத்தகம் இவருடைய மூன்றாவது பயணக் கட்டுரை. இவர் சிறந்த எழுத்தாளர். பத்திரிக்கையாளர், மொழிபெயற்பாளர்,



சமூக சேவகி என பன்முகங்கள் கொண்டவர். இவர் எழுதிய "ஸ்ரீ காஞ்சி மகானின் பாதுகை மகிமைகள்" என்ற புத்தகம் அனைவராலும், குறிப்பாக மஹாபெரியவா பக்தர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. "இலங்கையில் இராமாயணம் தேடல்" என்ற புதுமையான தலைப்பு. ஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகளிடம் தீக்ஷை பெற்ற குருஜி ஸ்ரீ மோக்ஷ வித்யானந்த சரஸ்வதி சுவாமிகளின் தலைமையில் சுவாமிகளின் மாணவ, மாணவிகள் 21 பேர் கொண்ட குழுவுடன் இலங்கைக்கு 7 நாட்கள் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டு அங்கு இராமாயணம் தொடர்புடைய முக்கிய இடங்களான இராவணன் சீதாதேவியை சிறை பிடித்து வைத்திருந்த அசோக வனம், சீதை அக்னிப் பிரவேசம் செய்த "திவ்ரும்போலா", ஸ்ரீ லங்காதீஸ்வரர் ஆலயம். விபீஷ்ணர் மாளிகை போன்ற பல முக்கிய இடங்களை பார்வையிட்டு, அந்தந்த இடத்தில் உள்ள உள்ளூர் வாசிகளிடம் பல விவரங்களைச் சேகரித்து பல ருசிகர தகவல்களை இப்புத்தகத்தில் அளித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் புத்தகத்தின் இறுதிப் பகுதியில் இலங்கை முழுவதும் அமைந்துள்ள இராமாயணம தொடர்புடைய பல இடங்கள் குறித்து பல புத்தகங்களிலிருந்தும், மின் தளங்களிலிருந்தும் ஏராளமான தகவல்களைத் தேடித் தேடி சிறப்பாகத் தொகுத்து வழங்கியிருக்கிறார். அதனால்தான் புத்தகத்திற்கு "இலங்கையில் இராமாயணம் தேடல்" என பெயர் சூட்டினாரோ?



"புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" என்பார்கள். "ஹஸ்தம்" என்றால் "கை" என்றும், "பூஷணம்" என்றால் "அணிகலன் அல்லது ஆபரணம் என்று பொருள். ஒரு நல்ல புத்தகத்தை நாம் கைகளில் வைத்திருந்தால் அது நம்முடைய கைகளில் அணிகலன்களை அணிந்திருப்பதற்கு ஒப்பாகும்.

இந்த புத்தகமும் நம் கைகளில் எப்போதும் இருக்கவேண்டும். குறிப்பாக இலங்கைக்கு இராமாயணம் தொடர்புடைய இடங்களை பார்ப்பதற்கு ஆன்மீகப் பயணம் மேற்கொள்பவர்கள் இந்த புத்தகத்தை வைத்திருந்தால் அது அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்.

புத்தகம் பெற விரும்புகிறவர்கள் கீழ்கண்ட எண்களைத் தொடர்பு கொள்ளவும். செங்கை பதிப்பகம் : *9443331393* விலை ரூ. *150/-*

ஆசிரியர்
வேதபாரதி செய்திகள்.

## கார்த்திகை - மார்கழி மாத விசேஷங்கள்
**(டிசம்பர் 17.12.2019 முதல் ஜனவரி 14.1.2020 வரை)**

| | | |
|---|---|---|
| 22.12.2019 | மா 6 | ஏகாதசி |
| 23.12.2019 | மா 7 | ஸோமப் பிரதோஷம் |
| 25.12.2019 | மா 9 | ஸர்வ அமாவாசை |
| 26.12.2019 | மா 10 | சூர்யகிரஹணம், ஹனுமத் ஜெயந்தி |
| 27.12.2019 | மா 11 | சபரிமலை நடை அடைப்பு |
| 31.12.2019 | மா 15 | சபரிமலை நடை திறப்பு மகரவிளக்கு |
| 06.01.2020 | மா 21 | சர்வ பீஷ்ம வைகுண்ட ஏகாதசி |
| 08.01.2020 | மா 23 | பிரதோஷம் |
| 10.01.2020 | மா 25 | ஆருத்ரா தரிசனம் - பௌர்ணமி விரதம் |
| 11.01.2020 | மா 26 | ஸ்ரீ ரமண மகரிஷி ஜெயந்தி |
| 13.01.2020 | மா 28 | ஸங்கடஹர சதுர்த்தி |
| 14.01.2020 | மா 29 | போகிப்பண்டிகை |

# யுவஸ்ரீ

## பள்ளிக் குழந்தைகளுக்கான சிறப்பு நிகழ்ச்சி

## நாள் : 14.11.2019



திருவான்மியூர் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில் 14.11.2019 மாலை 2.00 மணி முதல் 5.00 மணி வரை பெண் குழந்தைகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் வேதபாரதி அமைப்பின் மூலம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் விளையாட்டின் மூலம் உடல், மனம், ஆரோக்கிய விளக்க வகுப்புகள் யோகாச்சார்யார் திருச்சி சந்திரசேகரன் அவர்கள் நடத்தினார்கள். மன வளப் பயிற்சி, சவால்களை எதிர்கொள்ளல் தன்னம்பிக்கை குறித்து விழிப்புணர்வு வகுப்புகளை டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன் குழந்தைகளுக்கு நடத்தினார்கள். பள்ளி நிர்வாகம், நேர்த்தியான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பாளர்கள் ஸ்ரீ சௌபாக்யா ரமேஷ், குரோம்பேட்டை ஸ்ரீ நரேந்திரன் மேற்கொண்டார்கள்.





## SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No. DIT (E) No.2 (651) / 12-13 / Sl. No. 90 / 13-14

Shri G.S. Venkataraman
Author

Shri N. Subramaniam
Managing Trustee

Shri S. Suga, Smt. B. Indira Balaji, Shri. R.V. Sathyanarayana,
Shri. J. Sathish, Sow. G.V. Mahasree Neela
Trustees

அன்புடையீர்

ஏழை புற்றுநோயாளிகளை காக்கும் மாபெரும் பணியை தொடர்ந்து இருபது ஆண்டுகளாக செய்து வரும் 'ஸ்ரீ மாதா ட்ரெஸ்ட்' நம்ம தர்ம சாலாவில்

12.12.2019 வியாழன் மாலை 6.00 மணிக்கு

**கூட்டுப்பிரார்த்தனை**

**தாயே 'சக்தி கொடு'**

**'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம்**

**'ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம்**

இடம்:

**நம்ம தர்ம சாலா**

நெ.9, யோகி கார்டன், ஸ்ரீராம் நகர், அடையார்,
ஐ.ஐ.டி காம்பவுண்ட் அருகில்
பள்ளிப்பட்டு மெயின் ரோடு, சென்னை - 113.
போன் : 044-45098647

பயன் எண்ணாமல் உழைக்கச்சொன்னான்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னான் - பாரதி

மேலும் தொடர்புக்கு : 9444060346

நிகழ்ச்சி ஏற்பாடு
**வேதபாரதி**, சென்னை,
செல்: 94434 95950

**பூர்ணானந்தா**
(N. சுப்ரமண்யம்)
நிர்வாக அறங்காவலர்
ஸ்ரீ மஹா மேரு மண்டலி

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் **"இலவச காப்பகம்"**

**"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"** என்று பாடிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள், செல்வி மணிபாலா அவர்களின் இன்றைய மனித நேயத்தைக் கண்டிருந்தால் இவளை மகளாய் பெற்றதற்கு என்ன மாதவம் செய்திருக்க வேண்டும் என்று அவர் பெற்றோரிடம் பெருமை யோடு சொல்லியிருப்பார்...




அப்படி என்ன செய்து விட்டார் இந்த இளம்பெண்? இதோ, ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் திரு **V.கிருஷ்ணமூர்த்தி** அவர்களுக்கு, அவர் எழுதிய மடலைப் படியுங்கள்...

பெருமதிப்பிற்குரிய திரு.கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களுக்கு வணக்கம். கன்னடத்தில் இருந்து தமிழுக்கு நான் மொழி பெயர்த்த புத்தகம் சென்ற ஆண்டு வெளியானது. அப்புத்தகத்திற்கு இவ்வாண்டு நவம்பர் 9ஆம் தேதி சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருதும், பரிசுத்தொகை பத்தாயிரமும் கிடைத்தது. என் தந்தையார் சென்ற ஆண்டு இறைவனடி சேர்ந்துவிட்டார். அவர் கையில் கொடுக்க ஆசைப்பட்ட இந்த பரிசுத்தொகையை அவரது நினைவாக நமது ஸ்ரீ மாதா டிரஸ்ட்டுக்கு தருவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த தகவலை அறிந்தால் என் தாயாரும், என் குடும்பமும் மகிழ்வார்கள். என் உயிரான என் தந்தையாருக்கும் இது ஆன்ம சந்தோஷத்தைத் தரும் என்று நான் நம்புகிறேன். நான் வாழ்வில் அனைத்து வகையிலும் மேன்மையடைய தங்கள் ஆசீர்வாதம் என்றும் வேண்டும் என்று வேண்டும் உங்கள்

அன்பு மகள் மணிபாலா. நன்றி.

26.11.2019



ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, தனது அன்றாட வாழ்வுக்கு பாலம் ஐயா அவர்களிடம் சேவை மனப்பான்மையுடன் ஊழியம் செய்யும் முதுநிலை பட்டதாரியான இந்த பெண்ணுக்கு பத்தாயிரம் ரூபாய் என்பது ஒரு மிகப்பெரிய தொகை. திருமணம் கூட ஆகாத இந்த ஏழைப் பெண்ணின் செயல் போற்றுதலுக்கும் அப்பாற்பட்டது !!

தனது பெற்றோர் பெருமை கொள்ளும் வகையில் தர்மம் செய்துள்ள **மாதருள் மாணிக்கம் செல்வி மணிபாலா** அவர்களின் "மனிதநேயம்" ஸ்ரீ மாதா டிரஸ்ட் என்னும் வானுயர்ந்த கோபுரத்தை நிரந்தரமாய் அலங்கரிக்கும் கலசங்களுள் ஒன்றாக என்றென்றும் திகழும் என்றால் அது மிகையல்ல. நீங்களும் இந்த பெண்ணுக்கு நல்லதொரு திருமண வாழ்க்கை விரைவாய் அமைந்திட வாழ்த்துங்களேன்...!

**- V.கிருஷ்ணமூர்த்தி**

**உங்களால் முடிந்த அளவு நிதியுதவி செய்து ஏழை புற்றுநோயாளிகளின் துயர் துடைத்திட உதவுங்களேன் !!**

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்...**

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "நம்ம தர்மசாலா"வின் செலவினை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.
Account Name: SRI MATHA TRUST | Bank Name: INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.: 163502000001090 | IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Opp. to Thirukkural Unavagam] Adyar, Chennai - 600 020.
Tel: (044) 2442 0727 / (044) 4266 1687 Mobile: 9444001065 / 9381020727 9003247857 Email : vkrishnamoorthy.smt@gmail.com

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar, Adjacent to IIT Compound, Off:Pallipattu Main Road, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: 'NATHA KAMALAM' 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.

## ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**




# பூஜ்ய ஸ்ரீ பரமானந்தபாரதி ஸ்வாமிஜுக்கு ஸ்ர்த்தாஞ்சலி

வேதபாரதி ஸ்தாபனத்தின் ஆன்மீக குருவான பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் அவர்களுக்கு 10.11.2019 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு ஸ்ரதாஞ்சலி திருப்பூரில் நடைபெற்றது. திருப்பூர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலி தலைவர் டாக்டர் கே.நடராஜன் அவர்கள் தலைமையில் அவர் இல்லத்தில் நடைபெற்றது. ஸ்ரீ வேணுகோபால் அவர்கள் எல்லா உறுப்பினர்களையும் தொடர்பு கொண்டு, முறையாக ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் செய்விக்க ஸ்ரீமான் நாராயண வாத்யார் குழுவினர் ஆரம்பித்து வைக்க பாராயணம் செய்தோம். பின் ஸ்ரீ நாராயண வாத்யார் குழுவினர் வேத பாராயணம் செய்தார்கள். அதன் பின் மண்டலி மாதர்கள் அஷ்டபதி பாடி எல்லோரும் நம் ஸ்வாமிகளை நினைத்து போற்றினோம்.

வேதபாரதியின் ஸ்தாபக அறங்காவலர் ஸ்ரீ டி.ஆர். ராமனாதன் ஸ்வாமிகளுக்கு புகழஞ்சலியும், நாம் 2001 முதல் ஸ்வாமிகளுடன் மேற்கொண்ட புனிதப் பயணத்தையும் நினைவு கூர்ந்தார். ஸ்வாமிகளின் நினைவலைகளை போற்றும் வகையில் ஸ்ரீ டைமண்ட் டைஸ் சந்துரு, ஸ்ரீ சிவகுமார், வீனஸ் டைஸ் வைத்யநாதன் அவர்களின் துணைவியார், ஸ்ரீ நாராயண வாத்யார், கே.கே.பாலசுப்ரமணியன், ஆர்.வெங்கட்ராமன் ஆகியோர் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். ஸ்ரீ வேணு கோபால் அவர்களின் நன்றியுரையுடன் ஸ்வாமிகளை போற்றும் புகழஞ்சலி நிறைவுற்றது.

ஸ்வாமிகளின் நினைவைப் போற்றும் வகையில் ஸ்வாமிகளின் ஆசிகளுடன் ஸ்ரீ சங்கர பகவத் பாதருக்கு சங்கர ஜயந்தியும், வேதாந்த வகுப்புகளும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

வேதபாரதி.

---

## “வேதாந்த பிரபோதம்” புத்தகம்

நம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸவாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.

தொடர்புக்கு : **9444445156 / 97909 20672**

# புதுச்சேரி வேதபாரதி

வேதபாரதி கடந்து வந்த பாதை :

ஓராண்டு காலம் இணைக்கப்பட்ட பிராமண சொந்தங்களை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள, அவரவர் விரும்பும் வேதபாரதி உறுப்பினர் இல்லத்தில் பிரதி ஏகாதசியில் "ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாம பாராயணமும்" பிரதி பௌர்ணமியில் "ஸ்ரீலலிதா சஹஸ்ரநாம பாராயணமும்" கூட்டாக ஒன்று சேர்ந்து ஜபித்ததை சிறப்பானதாக சொல்லலாம்.

மேலும் திருமீயச்சூர் லலிதாம்பிகை தரிசனம், காஞ்சி காமாட்சி தரிசனம், தேனாம்பாக்கம் பெரியவாள் தரிசனம் போன்றவை உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஆன்மீக சுற்றுலாவாகவும் நடத்தப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்கது காஞ்சி அத்திவரதர் தரிசனம். இதற்காகவே பிரத்யேகமாக ஒரு நாள் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதுவும் திருவோண நட்சத்திரத்தில் வயதான பல பெண்களும், ஆண்களும் தன் வாழ்நாளில் மீண்டும் தரிசிக்க முடியாத "அத்திவரதரை" தரிசிக்க வைத்த பெருமை புதுவை வேதபாரதிக்கு உண்டு.

குறிப்பாக வீட்டிலிருந்து யாரும் துணைக்கு வராத நிலையில் நடக்கவே இயலாதவர்களும் இதில் அடக்கம். புதுவை வேதபாரதி மற்றும் அதன் நிர்வாகத்தின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

அதுபோன்றே, சந்த்யாவந்தனம் மற்றும் பண்பு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டது. அதில் நமது சமுதாயத்தினருக்கு பல ஆலோசனைகளை அனுபவம் வாய்ந்தவர்கள் மூலம் எடுத்துச் சொல்லி, சந்தியாவந்தனம் போன்ற கர்மாக்களும் பயிற்சியாக அளிக்கப்பட்டது.

இதில் மூன்று நாட்கள் சிறப்பு சந்த்யாவந்தன முகாமிற்கு கோவிந்தபுரம் அழைத்துச் சென்று உறுப்பினர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது. அங்கு கர்மயோகி ஸ்ரீ ரமண பாரதி க்ருஷ்ண ஜகந்நாதன் அவர்களின் சிறப்புரையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

பெண்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் அந்தண சமூகத்தினரை எளிதில் ஒன்றிணைக்கலாம் என்பதை நன்குணர்ந்த புதுவை வேதபாரதி அவர்களுக்கான விசேஷ விழாவான "நவராத்திரி" கொண்டாடும் பெண்களை ஊக்குவிக்கும் விதமாக



கொலுக்காட்சிகளை தனது குழுவின் மூலம் பார்வையிட்டு அவர்களுக்கு ஆண்டு விழாவில் சானறிதழ் வழங்கியும் கௌரவித்தது.

இப்படி கடந்த ஓராண்டுகால சாதனைகளோடு அடுத்தாண்டு இன்னும் பலப்பல பணிகளைச் செய்யவிருக்கிறோம் என்பதை விளக்கிய சாதனை அறிக்கை முடிவுற்றது.

பாண்டிச்சேரியின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் வருமானவரித் துறை ஸ்ரீ ரவி, ஸ்ரீ ரகோத்தமன், ஸ்ரீ சீத்தாராமன், ஸ்ரீ ஓரியண்டல் சேகர், ஸ்ரீ எஸ்.பி.ஐ. மகேஷ், சென்ட்ரல் எக்சைஸ் ஸ்ரீ பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பணி மிகவும் பாராட்டத்தக்கது.

'மகுடம்' என்ற புதுவை வேதபாரதியில் மேற்கண்ட விழா நிகழ்வுகள் ஒவ்வொரு வைரங்களாக ஜொலித்தன. அந்த மாணிக்கங்களுக்கு மத்தியில் மிகப் பிரகாசமாக மின்னும் மாணிக்கமாக ஒரு நிகழ்வு நடந்தது. பெரும் பதவிகளை வகித்து, சமூகத்தில் பலப்பல சாதனைப் பணிகளை பல்வேறு துறைகளிலிருந்து செய்த நமது சமுதாய பிதாமகர்களுக்கு, அதாவது கிட்டத்தட்ட எண்பது வயதை கடந்தவர்கள் இன்னும் சமூகப்பணி செய்பவர்கள், இவர்களுக்கு "வாழ்நாள் சாதனையாளர்" விருதுகளை வழங்கி அவர்களை கௌரவப்படுத்தி தன் மகுடத்தை மென்மேலும் பிரதிபலிக்கச் செய்துவிட்டது.

இதில் தன்னலங்கருதாது பிராமண சமூகத்திற்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு புதுவை பிராமணர்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும் ஸ்ரீ வேதராமன் அவர்களை கௌரவித்தது புதுவை பிராமணர்களுக்கு பெருமை சேர்ப்பதாக இருந்தது.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் புதுவையின் முதல் அந்தண சமுதாய சட்டமன்றஉறுப்பினர் என்றபெருமைக்கு சொந்தக்காரர் திரு. சங்கர் எம்.எல்.ஏ அவர்களும், தினமலர் புதுவை பதிப்பின் அதிபர் திரு.வெங்கட்ராமன் அவர்களும் விழாவில் முழுமையாக குடும்பத்தோடு பங்கெடுத்துக் கொண்டதோடு, வேதபாரதிக்கு பக்கபலமாக பல வகையில் தங்களை இணைத்துக்கொண்டது, விழாவின் வெற்றியில் குறிப்பிடத்தக்கது.

இத்தனை விழா நிகழ்ச்சிகளுக்கிடையிலும், பிராமண சமுதாயத்திற்கு தற்போது மிக முக்கியத் தேவையான "ஜாதக பரிவர்த்தனைக்கான பதிவும்" நடைபெற்றது. முழுக்க முழுக்க சேவையின் நோக்கத்தில் பதிவு செய்யப்பட்டதும் அதற்கான முன்னெடுப்பும் சிறப்புற அமைந்திருந்தது.

கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது, பெண் குழந்தைகளும்,

ஆண் குழந்தைகளும் அவர்களது திறமைகளை வெளிப்படுத்தினர். ஸ்லோகங்களை தெளிவாக உச்சரிப்பதும். பாடல்களை ஜீவனோடு பாடுவதும், இசைக்கருவிகளை நேர்த்தியாக வாசிப்பதும் சிறு குழந்தைகளின் அசாத்திய திறமையை மெச்சத் தகுந்ததாக இருந்தது. மேலும், நமது கலாச்சாரத்திலிருந்து பண்பாட்டிலிருந்து சம்பிரதாயத்திலிருந்து வெகுதூரம் நாம் விலகிவிடவில்லை என்றபெரிய நம்பிக்கையும் தந்தது.

நிறைவாக கர்மயோகி ஸ்ரீ ரமண பாரதி கிருஷ்ணன் ஜெகந்நாதன் ஜி அவர்களின் எழுச்சியுரை காலை முதல் விழாவில் பங்குகொண்டவர்களின் மாலைச் சோர்விலிருந்து தட்டி எழுப்பி புத்துணர்வை கொடுத்ததோடு பிராமணனின் பாதையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும் வைத்துவிட்டது.

புதுவை வேதபாரதியின், தலைவர் திரு. என்.ஜே.சி. ரமேஷ், துணைத்தலைவர் அட்வகேட், பட்டாபிராமன், செயலர், சந்திரசேகரன், திரு. சீதாராமன், திரு. ரவி மற்றும் இவர்களது குழுவினரால் நிர்வகிக்கப்படும் புதுவை வேதபாரதியின் முதலாம் ஆண்டு விழா துணைத்தலைவர் அட்வகேட், பட்டாபிராமன் அவர்கள் நன்றி நவில காஞ்சி மஹானின் துணையோடு இனிதே நிறைவுற்றது.

# வேதபாரதி

## யுவன் யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

## ஆசிரியர்கள் பயிற்சி முகாம்

பதின்பருவ மாணவர், மாணவியருக்கு வாழ்வியல் பயிலரங்கம் நடத்திட ஆசிரியர் பயிற்சி முகாம் (இடம் : சென்னை), இரண்டு நாட்கள் (தேதி பின்னர் அறிவிக்கப்படும்) தங்குமிடம், உணவு ஏற்பாடு உண்டு. **குறிப்பு** : *25வயதிற்கு மேற்பட்ட 35 வயதிற்கு உட்பட்ட திருமணமான பெண்கள் கலந்து கொள்ளலாம். ஏதேனும் ஒரு கல்லூரி படிப்பு பெற்றிருக்க வேண்டும்.*

## பயிற்சி இலவசம்

பயிற்சி பெற்றவுடன் வகுப்பு நடத்துபவர்களுக்கு
போக்குவரத்து மற்றும் தகுந்த சனமானம் வழங்கப்படும்.

மேலும் தொடர்புக்கு
**போன்:9894736419, 9884031563**



உ
ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

(பாரத பண்பாட்டு அமைப்பு)
எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,
பேபி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042. செல்: 94434 95950

## ஸந்த்யா வந்தன போட்டி - 2019

அன்புடையீர்,

நமஸ்காரங்கள் / ஆசிர்வாதங்கள்

**'வேதபாரதி' மற்றும் 'வேத வ்யாஸ குருகுலம்' - நெமிலிச்சேரி இணைந்து வழங்கும்** ஸந்த்யா வந்தன போட்டி மற்றும் அந்தணர் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கு பெற அழைக்கிறோம்.

**நாள்: 25.12.2019, புதன்கிழமை, மதியம் 2.00 மணி**
**இடம்: வேத வ்யாஸ குருகுலம் வேதபாடசாலை, பாலசுப்பிரமணியம் தெரு, நெமிலிச்சேரி, குரோம்பேட்டை, சென்னை.**

1. *உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள் கலந்து கொள்ளலாம்.*
2. *எல்லா ஸாகைகளுக்கும் வேத விற்பன்னர்கள் எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் பரிட்சை செய்வார்கள்.*
3. *முன் பதிவு கடைசி நாள் 10.12.2019*
4. **பெண் குழந்தைகள் 6ம் வகுப்பிற்கு மேல் உள்ளவர்கள் கீழ்கண்ட போட்டிகளில் கலந்து கொள்ளலாம். யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்.**
   1. **பேச்சுப்போட்டி - நேரம் 5 மணித்துளிகள்**
      **தலைப்பு: 1. நட்புக்கும் உறவிற்கும் ஆன புரிதல்**
      **2. என் குடும்ப பெருமை**
      **3. முடிவு எடுக்கும் தருணத்தில் யார் துணை**
   2. **விளையாட்டுப் போட்டி: பல்லாங்குழி, தாயம், கயிற்றாட்டம் (Skipping), பாண்டி**
   3. **சான்றோர் பெருமக்களின் ஆசிகளுடன் பரிசுகள், சான்றிதழ், பாராட்டுகள் பெற அன்புடன் அழைக்கிறோம்.**

**முன்பதிவிற்கு - 99949 26537, 86674 16781**

புத்தக வடிவமைப்பு : **ரெம்ஸ் பிரிண்ட்ஸ்**
*நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர், காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.*
*போன்: 8939000064*

## வியக்க வைக்கும் எண்கள்

கணிதம் என்பது ஒரு ஆழமான கடல். இந்த கணிதத்தின் அடிப்படை அம்சமே ஒன்றிலிருந்து ஒன்பது வரையுள்ள எண்கள்தான். எண்கள் வரிசையில் ஒன்று முதல் 100 வரை விரிவாக பார்ப்போம்.

**எண் 3-ன் சிறப்பு**

1. கட்டுப்படுத்த வேண்டிய மூன்று - உணர்ச்சி வசப்படுதல், ஆசை, நாக்கு.
2. காப்பாற்ற வேண்டிய மூன்று - நட்பு, செல்வாக்கு, பற்று.
3. கவனிக்க வேண்டிய மூன்று - நடத்தை, செயல், பேச்சு
4. மறைக்க வேண்டிய மூன்று - ஸ்திரீ, சாப்பாடு, பணம்
5. விரும்ப வேண்டிய மூன்று - தூய்மை, நேர்மை, உழைப்பு
6. தூர விலக்க வேண்டிய மூன்று - சூதாட்டம், மது, புகை, பிடித்தல்
7. பாராட்ட வேண்டிய மூன்று - அறிவு, குணம், அழகு
8. வாழ்க்கையில் ஒரே தடவை கிடைக்கும் மூன்று - அம்மா, அப்பா, இளமை
9. மதிப்பு அளிக்க வேண்டிய மூன்று - மதம், முதுமை, சட்டம்
10. வளர்த்துக் கொள்ள வேண்டிய மூன்று : அஞ்சாமை, திருப்தி, உற்சாகம்
11. ஒழிக்கவேண்டிய மூன்று - கோள்மூட்டுவது, பொய் பேசுவது, கர்வம் கொள்வது.
12. மோக்ஷம் கிடைக்க விட்டுவிட வேண்டிய மூன்று - கர்வம், காமம், மாயை
13. இந்த மூன்றையும் யாராலும் திருட முடியாது - கல்வி, நன்நடத்தை, திறமை.
14. இந்த மூன்றையும் மறக்கக்கூடாது - மரணம், உண்மை, கடமை
15. இந்த மூன்று பேரையும் மரியாதையுடன் நடத்தவேண்டும். தாய், தந்தை, குரு.
16. இந்த மூன்றும் யாரையும் எதிர்பார்க்காது. காலம், மரணம், வாடிக்கைக்காரன்.
17. சகோதரனையே விரோதியாக்கிவிடும் மூன்று பணம், நிலம், மனைவி
18. இந்த மூன்றும் போனால் வராது-சொல், அம்பு, உயிர்.
19. மூன்று சக்திகள் - இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி.
20. முக்குணங்கள் - சத்வம், ராஜஸம், தாமஸம்.

எண் 3 தொடரும்

தொகுப்பு : **ஆதித்யன்**



## தெரிந்துகொள்வோம்

1. நம்பினோர்க் கெடுவதில்லை. இது நான்கு மறை தீர்ப்பு எனப் பாடியது யார்?
2. இரு மூர்த்திகளின் மைந்தர் யார்?
3. ஷண்முக கவசம் பாடியவர் யார்?
4. பரிபாடல் நூல் எந்தக் கடவுளை பற்றியது?
5. ‘நாளென் செய்யும் வினைதான் என் செய்யும் எனை நாடி வந்த கோள் என் செயும்’ இதைப் பாடியவர் யார்?
6. சிவன் மன்மதனை எரித்த சம்பவத்தை கூறும் நூல் எது?
7. கம்பரின் மானசீக குரு யார்?
8. விபீஷணனின் மகள் பெயர் என்ன?
9. குழந்தை முருகனுக்கு மயிலைப் பரிசாகத் தந்தது யார் ?
10. விவேகானந்தரின் சீடரான நிவேதிதா எந்த நாட்டை சார்ந்தவர்?

விடை 46ம் பக்கம்

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

**திருமதி. தனலட்சுமி** 9444140119 | **திருமதி. ராஜலட்சுமி** 7092199447

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

**ஸ்ரீ பாலசுப்பிரமணியன்** 9442094380

**ஸ்ரீ நடராஜன்** 9443103404






## பிரதக்ஷிணம்

"வேதபாரதி செய்திகள்" வாசகர்களை கடந்த மாதம் முதல் (நவம்பர் 19) சிறு உருவம் கொண்ட எறும்பு முதல் பெரிய உருவம் கொண்ட யானை வரை பலவித மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் என பல உயிரினங்கள் இறைவனை வழிபட்ட கோயில்களுக்கு 'பிரதக்ஷிணம்'' வைக்க அழைத்துச் செல்வது என விரும்பி முதலில் பசுக்கள் வழிபட்ட திருஆமாத்தூர் என்ற கோயிலுக்கு அழைத்துச்சென்றேம். இந்த மாதம் குரங்கு, அணில், காகம் ஆகியவை இறைவனை வழிபட்டு முக்தி அடைந்த ஒரு கோயிலுக்கு அழைத்துச் செல்கிறோம்.

### பிரதிக்ஷிணம் - 13
### அருள்மிகு வல்லிஸ்வரர் திருக்கோயில்
### திருக்குரங்கணில் முட்டம்

இந்த ஸ்தலத்தில் குரங்கு, அணில், மற்றும் காகம் (முட்டம் என்றால் காகம் என்று பொருள்) ஆகிய மூன்றும் இங்குள்ள ஈசனை வழிபட்டுப் பேறு பெற்றதால் இந்த ஸ்தலத்திற்கு "குரங்கணில் முட்டம்" என்று பெயர். வாலி, இந்திரன் மற்றும் யமன் ஆகிய மூவருக்கும் ஏற்பட்ட முன்வினைப் பயனால் வாலி குரங்காகவும், இந்திரன் அணிலாகவும், யமன் காகமாகவும் (முட்டம்) உருவம் பெற்று வருந்தி வாழ்ந்து இந்த ஸ்தலத்திற்கு வந்து வினைப்பயன் நீங்கப்பெற்றனர்.



வாலி : வானரத் தலைவனான வாலி ஒரு சிறந்த சிவபக்தன் அவன் தினமும் எட்டு திக்குகளிலும் உள்ள கடல்களில் புனித நீராடி, ஆயிரத்தெட்டு சிவலிங்கங்களுக்கு பூஜை செய்துவிட்டு அதன் பிறகே தனது நித்தியப் பணிகளை மேற்கொள்வான். ஒரு

சமயம் முன்வினைப் பயனால் துன்புற்ற அவன் சிவபெருமானின் ஆணைப்படி இத்தலம் வந்து இங்குள்ள ஈசனை வழிபட்டார். ஆகையால் இந்த ஸ்தலத்தில் உள்ள ஈசனுக்கு "வாலிஸ்வரர்" என்ற பெயர் ஏற்பட்டது. வாலியாகிய குரங்கு வழிபடும்போது ஈசனுக்கு வேண்டிய பூக்களை தன் கைகளால் பறிக்காமல் மரத்தையே உலுக்கி பூக்கள் நேராக ஈசனின் திருமேனிமேல் விழுமாறு செய்து அர்ச்சனை செய்தான். ஆகையால் இங்குள்ள ஈசனுக்கு "கொய்யாமலர் நாதன்" (பறிக்காத மலர்களால் பூஜிக்கப்பட்டவர்) என்ற பெயரும் உண்டு. இங்கு வழிபட்டதால் குரங்காகிய வாலி சாபவிமோசனம் பெற்றார்.

இந்திரன் : இந்திரன் கௌதம முனிவரின் மனைவியான அகல்யாதேவியின் மீது மோகம் கொண்டதால் முனிவரின் சாபத்தால் உடல் முழுவதும் கண்களாக தெரியும்படி சாபம் பெற்றான். இந்திரன் தன் தவறை மன்னிக்கும்படி சிவனிடம் வேண்டினான். அவனுடைய வேண்டுதலுக்கு செவிமடுத்த சிவன் தகுந்த காலத்தில் பூலோகத்தில் தான் சாபவிமோசனம் தருவதாகவும் அதுவரையில் பூமியில் உள்ள சிவ ஸ்தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ளும்படியும் கூறினார். அதன்படி இந்திரன் பூலோகத்தில் பல ஸ்தலங்களுக்குச் சென்று கடைசியில் இந்த ஸ்தலத்திற்கு அணில் உருவில் வந்து ஈசனை வழிபட்டு சாபவிமோசனம் பெற்றான்.

எமன் : 16 வயது வரை மட்டுமே ஆயுள் பெற்ற மார்க்கண்டேயன் பல்வேறு சிவஸ்தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டார். தனது ஆயுள் முடியும் கடைசி நாளன்று எமனுக்கு அஞ்சி சிவபெருமானை கட்டித் தழுவினார். அப்போது அவரை பிடிக்க வந்த எமன் பாசக்கயிற்றை மார்கண்டேயன்மீது வீசவே அது தவறுதலாக சிவன் மீது விழுந்தது. இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் எமனை எட்டி உதைத்து அவனது பதவியை பறித்தார். பதவியை இழந்த எமன் சிவனை வணங்கி அவரிடம் மன்னிப்பு கேட்டான். பூலோகத்தில் குறிப்பிட்ட காலத்தில் தன் தரிசனம் கிடைக்கப்பெற்று இழந்த பதவி மீண்டும் கிடைக்கப்பெறும்



என்றார். அதன்படி பூலோகம் வந்த எமன் முட்டம் (காகம்) வடிவில் இந்த ஸ்தலதத்திற்கு வந்து ஈசனை வழிபட்டார். காகம் வடிவில் இருந்த எமதர்மன் தன் அலகால் நிலத்தை கீறி ஊற்று ஏற்படுத்தி அதில் வரும் தீர்த்தத்தை தன் அலகால் எடுத்துச் சென்று ஈஸ்வரனுக்கு அபிஷேகம் செய்தாராம். ஆகையால் இந்த தீர்த்தத்திற்கு 'காக்கை தீர்த்தம்' என்றும் இந்த குளத்திற்கு 'காக்கை மடு' என்றும் பெயர். இந்த குளம் இன்றும் ஆலயத்தின் பின்புறம் பிறைச் சந்திரன் வடிவில் ஆலயத்தை சுற்றி மூன்று பக்கங்களிலும் அமைந்துள்ளது.

இந்த ஆலயம் சுமார் 1500 ஆண்டுகள் பழமையானது. கி.பி. 637ல் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் இந்த ஆலயத்தைக் கட்டியதாக கல்வெட்டுகள் கூறுகின்றன. திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம் இறைவன், ''வாலிஸ்வரர்', 'கொய்யாமலர்நாதர்' சுயம்புலிங்கமாக சிறிய உருவில் மேற்கு நோக்கி காட்சி அளிக்கிறார். சித்திரை மாதத்தில் குறிப்பிட்ட சில நாட்களில் மூலவர் மீது சூரிய ஒளி விழுகிறது. அம்பாளின் திருநாமம் "இறையார் வளையம்மை". இவள் தனிச் சன்னதியில் தெற்கு நோக்கி காட்சி அளிக்கிறாள். உள் பிரகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், காசி விஸ்வநாதர், பைரவர், சூரியன், நவக்கிரஹம், துர்கை, சப்தமாதர்கள், நால்வர் ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. கோயிலின் முன்மண்டப சுவர்களில் குரங்கு அணில், காகம் (முட்டம்) ஆகிய மூவற்றின் உருவங்களும் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

காஞ்சிபுரத்திலிருந்து பாலாற்றைக் கடந்தால் சுமார் 9 கி.மீ தொலைவில் தூசி என்ற கிராமம் அருகிலிருந்து பிரியும் பாதையில் 2 கி.மீ சென்றால் இந்த ஆலயத்தை அடையலாம். காலை 7 மணி முதல் 10 மணி வரையிலும், மாலை 4 முதல் இரவு 7 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும், குரங்கணில் முட்டத்தை முறையாக வணங்குபவர் வினைகள் இல்லாதவர் ஆவர்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

## பழமொழிகளும் அவற்றுக்குண்டான உண்மையான அர்த்தங்களும்

பழமொழி என்பது ஒரு செயலுக்கு அல்லது செய்கைக்கு விளக்கம் தர சொல்லப்பட்டது. அந்தக்காலத்தில் சொல்லப்பட்ட பழமொழிக்குண்டான உண்மையான அர்த்தங்கள் நாளடைவில் மருவி தற்போது ஏதோ அர்த்தங்கள் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பழமொழிகளின் சரியான விளக்கங்கள் இந்தப்பகுதியில் தொடர்ந்து அளிக்கப்படும்.

**1. சோழியன் குடுமி சும்மா ஆடுமா?**

**தற்போது சொல்லும் விளக்கம்**

**"சோழியன்" வைத்திருக்கும் குடுமி காரணம் இல்லாமல் ஆடாது.**

**உண்மையான பொருள்**

*"சோழியன் குடுமி சும்மாடு ஆகாது"*

*சோழியன் என்பது பிராமண குலத்தில் ஒரு பிரிவு. பொதுவாக பிராமணர்கள் தலைக்குப் பின்பக்கம் அடர்த்தியாக குடுமி வைத்திருப்பர். ஆனால் சோழியன் பிரிவைச் சேர்ந்தவர்கள் மட்டும் மலையாள நம்பூதிரிகளைப் போல தலையின் முன்பக்கத்தில் முடியும் வண்ணம் முன் குடுமி வைத்திருப்பார்கள். சோழியர்களின் குடுமி தலையின் முன்பக்கத்திலேயே அடர்த்தியாக முடியப்பட்டாலும் அது சும்மாட்டுக்கு இணையாக ஆக முடியாது.*

*சும்மாடு என்பது சுமை தூக்குபவர்கள் தலையில் துணியைச் சுருட்டி வசதிக்காக வைத்துக்கொள்வது. முன்குடுமி எவ்வளவு கட்டையாக இருந்தாலும் சும்மாடாகாது. அவர்களும் சுமை தூக்கும் போது சும்மாடு வைக்கத்தான் வேண்டும்.*

**2. ஆயிரம் பேரை கொன்றவன் அரை வைத்தியன் ஆவான்.**

*பொருள் :*

*ஆயிரம் மக்களை (நோயாளிகளை) கொன்றவன் பாதி வைத்தியன்.*

**உண்மையான பொருள்**

*அந்த காலத்தில் நாட்டுவைத்தியம், பச்சிலை வைத்தியம் செய்பவர்கள் நோயை போக்க ஆயிரம் வேர்களைக் கொண்டு மருந்து செய்து கொடுப்பார்கள். அப்படி கொடுப்பவன் அரை வைத்தியன் ஆவான்.*

**- தொகுப்பு ஆதித்யன்**



# தர்மத்தின் குரல்

# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.14. இன்னும் சில கேள்விகள் :

*10. "கஷ்டப்படுகிறவர்களுக்குச் சேவை செய்வது ப்ராயஸ்சித்தமாகுமா?"*

*அன்னதானத்தைப்போல, சேவையும் ப்ராயஸ்சித்தத்தின் ஒரு பகுதி மட்டுமே. புண்ய கர்மா, இரு பகுதிகள் கொண்டது: இஷ்டா, பூர்த்தா: தனி நபர் நலன் காண்பது இஷ்டா. சமுதாய நலன் பேணுவது பூர்த்தா மக்களுக்கு அன்னம் அளித்தல், அவர்களுக்காக வீடுகள் கட்டித்தருதல் குளங்கள் வெட்டுதல் முதலியன பூர்த்தா ஆவன. சாஸ்திரம் ஒரு ருசிகரமான விஷயத்தைச் சொல்கிறது. ஒருவன் செய்த எல்லா பாவங்களையும் ஒரே வீச்சில் தொலைக்க என்ன பிராயஸ்சித்தம் செய்ய வேண்டும்? விடை: அவன் ஒரு புதிய காட்டை உருவாக்கித் தன் வாழ்க்கையின் எஞ்சிய நாட்களை அதிலேயே வாழ வேண்டும். இதற்கு, ஒரு காட்டை அழிப்பது என்பது எல்லாப் பாவங்களையும் செய்வதற்கு ஒப்பானது என்ற பொருளும் அமைகிறது.*

*11. "சேவை செய்வது என்பது, சேவை செய்பவர்களின் ப்ராரப்தத்தில் தலையிடுவதாகுமா? இத்தகைய தலையீடு சரியா? தவறா?"*

*ஒருவர் கஷ்டத்தில் இருக்கும்போது, அவருடைய ப்ராரப்தத்தைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கக் கூடாது. உண்மையிலும் கூட, என்னிடமிருந்து இன்று இப்பொழுது உதவி பெற வேண்டும் என்பது அவருடைய ப்ராரப்தமாக இருக்கலாம். அந்த உதவியை நான் செய்தால், அவருக்கு நிவாரணம் கிடைக்கும். எனக்குப் புண்ணியம் வரும். எனவே, அவர்களுக்கு முடிந்த அளவு உதவி செய்ய நாம் விரைந்து ஓட வேண்டும். ரந்திதேவனைக் போன்ற பல பெரியவர்கள், நமக்கு முன்னுதாரணமாக நிற்கிறார்கள். ரந்திதேவன் என்பவன் ஓர் அரசன். வயோதிகத்தில் அவன் வானப்ரஸ்தம் கைக்கொண்டான்.*

தொடரும்

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 8

*சென்ற மாத தொடர்ச்சி...*

**யுத்த பூமியில் கீதோபதேசம் :**



''ஸஹஸ்ர கவசனை'' வதம் செய்ய பகவான் அவதாரம் எடுத்தார்.

பிரம்ம தேவரின் புத்திரனாகிய ''தக்ஷன்'' மனுவின் புதல்வியான "ப்ரஸூதி" என்பவளை மணந்தான். அந்த இருவருக்கும் 16 பெண்குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களில் 13 பேரை தக்ஷன் தர்ம தேவதைக்கு திருமணம் செய்துவைத்தான். அந்த 13 பேரில் கடைசி பெண் பெயர் "மூர்த்தி". அந்த மூர்த்தியின் வயிற்றில பகவான் ஒருவரே நரன் + நாராயணன் = நரநாராயணன் என்ற பெயரில் அவதரித்தார்.

**மூர்த்தி : ஸர்வகுணோத்பத்திர் நரநாராயணாவ்ருஷீ // (ஸ்ரீமத் பாகவத் 4-1-52)**

பொருள் : மூர்த்தியானவள் எல்லா நற்குணங்களுக்கும் மூலகாரணமாகிய நான், நாராயணன் என்னும் இரு முனிவர்களை ஈன்றாள்.

அதாவது ஒரு வடிவம் ''நரன்'' மற்றொரு வடிவம் "நாராயணன்''. அவர்கள் இருவரும் முனிவர்களானார்கள். நரநாராயணமூர்த்தியாக பூமியில் அவதரித்த பகவான் பத்ரிகாஸ்ரமத்தில் ரிஷியாய் தவம் இருந்தார். (இன்றும் பக்தர்கள் பத்ரி சென்று தரிசனம் செய்து வருகிறார்கள்) "நாராயணன்'' தவத்தில் ஆழ்ந்திருக்கும்போது "நரன்'' ஸஹஸ்ரகவசனுடன் யுத்தம் செய்வார். பிறகு "நரன்" தவத்தில் இருக்கும்போது "நாராயணன்" யுத்தம் செய்வார். பிறகு "நரன்'' தவத்தில் இருக்கும்போது "நாராயணன்" யுத்தம் செய்வார். இப்படியே பகவான் இருவேறு உருவத்தில் மாறி மாறி அந்த அசுரனுடன் யுத்தம் செய்து அவனுடைய 999 கவசங்களை எடுத்துவிட்டார். கடைசியில் குண்டலத்துடனும் ஒரு கவசத்துடனும் இருக்கும்போது தனக்கு மரணம் நிச்சயம் என்பதை புரிந்துக்கொண்ட 'அசுரன் ஸஹஸ்ர கவசன்' தன்னைக் காத்துக்கொள்ள சூரிய பகவானிடம் தஞ்சம் அடைந்தான். சூரியன், இவன் வாங்கியுள்ள வரத்தை தவறாக பயன்படுத்த தன்னிடம் தஞ்சம் அடைந்துள்ளான் என்பதை அறியாமல், அவனுக்கு தஞ்சம் அளித்ததோடல்லாமல் தக்க சமயத்தில் பூவுலகில் பிறக்க வைப்பதாகவும் உறுதி அளித்தார். ஆனால் இதை அறிந்த பகவானோ தன்னால் தான் அவனுக்கு மரணம் என்று கூறிவிட்டார்.



பூலோகத்தில் ''குந்திதேவி'' தான் யாரை மனதால் நினைத்தாலும் அவர் தன் முன் தோன்றவேண்டும் என்று ஒரு வரத்தைப் பெற்றிருந்தாள். ஒரு நாள் சூரியனின் ஒளியில் மயங்கி சூரியனைப்போல் ஒரு புத்திரன் வேண்டும் என்று நினைத்தாள். உடனே சூரியன் தன்னிடம் தஞ்சம் அடைந்த "ஸஹஸ்ர கவசனை" அவனுடைய ஒரு கவசத்துடனும், குண்டலத்துடனும் அவளுக்கு கொடுத்தான். அப்படி குந்திக்கு கவச குண்டலத்துடன் பிறந்த ஸஹஸ்ர கவசன் தான் "கர்ணன்" அவனை அழிப்பதற்காக பகவான் ஸ்ரீ நரநாராயணன் பூமியில் 'நரன்' அர்ஜுனன் ஆகவும் நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணனாகவும் அவதரித்தார். பகவான் அர்ஜுனனிடம் போர் புரியும்படி கூறினார். ஆனால் அர்ஜுனன் சேனைப்படையில் தன் உறவினர்களைப் பார்த்ததும் யுத்தம் செய்யமாட்டேன் என்று கூறினான். அப்படியானால் கர்ணனை கொல்வது யார்? அதனால்தான் பகவான் அங்கேயே அர்ஜுனனுக்கு "கீதோபதேசம்" செய்து யுத்தம் செய்யும்படி செய்தார். இவர்கள் இருவருமே கர்ணனின் மரணத்திற்கு காரணமாக ஆனார்கள். குருக்ஷேத்திரத்தில் பகவான் (நாராயணன்) ஸ்ரீ கிருஷ்ணன் போர் புரியாமல் தேரோட்டியாக சும்மா தவம் செய்வதுபோல் இருந்தார். நரனான அர்ஜீனன் கர்ணனுடன் போர் புரிந்து பூர்வஜென்மத்தில் ஒரு கவசத்துடன் மறைந்த "ஸஹஸ்ர கவசனை" அதாவது கர்ணனைக் கொன்றான்.

மேற்கண்ட காரணத்தால்தான் பகவான் அர்ஜுனனுக்கு யுத்த பூமியில் உபதேசம் செய்தார்.

தொடரும்....

**டி. சூரியநாராயணன்**

# பகவத் கீதா ஜயந்தி



*"பகவத் கீதா ஜயந்தி" அதாவது பகவத் கீதையின் பிறந்த நாள். சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் குருக்ஷேத்திர போர்க்களத்தில் கார்த்திகை மாத (நவம்பர்-டிசம்பர்) வளர்பிறை பதினோறாம் நாள் (சுக்ல ஏகாதசியில்) உபநிடத்தின் சாரமாக விளங்கும் பகவத் கீதை பகவான் ஸ்ரீகிருஷ்ணரால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. வடநாட்டில் ஒவ்வொரு வருடமும் இந்த நாளை "கீதா ஜயந்தி" என்று மிகச்சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். பகவத்கீதை வாழ்க்கைக்கு வேண்டிய எத்தனையோ உபாயங்களைக் கூறுகிறது. ஸ்ரீசங்கர பகவத்பாதர் தாம் அருளிய பஜகோவிந்தத்தில் கீழ்கண்டவாறு பாடியுள்ளார்.*

**பகவத் கீதா கிஞ்சித் தீதா**
**கங்ஜலலவ கணிகா பீதா |**
**ஸக்ருதபி யேந முராரி ஸமர்ச்சா**
**க்ரியதே தஸ்ய யமேந ந சர்ச்சா||**

*"எந்த மனிதன் தன் வாழ்நாளில் பகவத்கீதை என்ற புனித நூலின் ஒரு சிறு பகுதியையாவது படிக்கிறானோ, கங்கை நீரின் ஒரு துளியையாவது அருந்தினானோ ஒரு முறையாவது பகவானுக்குப் பூஜை செய்தானோ அவனைப்பற்றி எமன் பேசுவதில்லை."*

இந்த வருடம் "பகவத் கீதா ஜயந்தி" *08.12.2019* (ஞாயிற்றுக்கிழமை) நிகழ்கிறது. இன்று நாமும் கீதையின் 2ம் அத்தியாயத்தை வீட்டில் குழந்தைகளுடன் படித்து கீதை தினத்தைக் கொண்டாடுவோமாக.

## சூர்ய கிரஹணம்

*இந்த வருடம் 26.12.2019 வியாழக்கிழமை (விகாரி வருடம் மார்கழி மாதம் 10ம் தேதி, அமாவாசை மூல நட்க்ஷத்திரத்தில்) இரண்டாவது சூர்ய கிரஹணம் ஏற்படவுள்ளது. இந்த சூரிய கிரஹணத்தை இந்தியாவில் உள்ள அனைத்து ஊர்களிலும் நன்கு காணமுடியும். கிரஹணம் ஆரம்பம் காலை 08-09 மணி. மத்யமம் காலை 09.44 மணி. முடிவு 11-19 மணி. தர்பணம் செய்பவர்கள் காலை 08-09க்கு மேல் 09-44க்குள் செய்யவேண்டும்*



# இறைவனின் திருவடிகளில்

*நவம்பர் மாத இதழில் டாக்டர். ஷ்யாமா எழுதிய கட்டுரை - "நம்பிக்கையே இறையருள் தரும்" - நினைவு தொடர்*

வாஸ்தவத்தில், இப்போது பகுத்தறிவு பேசி வாய் புண்ணாக்கிக் கொள்ளும் மனிதர்களிடம் நாம் இது போன்ற பல அற்புத செயல்களை நம்மால் நினைத்துக்கூட பார்க்க இயலாத பல அற்புதங்களை கூறிக் கொண்டே போகலாம். ஆனால் என்ன பயன், என்ற நினைப்பில் நாம் பேசாமல் இருந்து விடுகிறோம்.

நம் அறிவிற்கும், கற்பனைக்கும் எட்ட இயலாத பல விஷயங்கள் நம் வாழ்விலேயே நடப்பதும் உண்டு.

அதில் ஒன்றுதான் இந்த கட்டுரை. அந்த மனிதருக்கு வயது *77* முருகனின் திருநட்சத்திரமான கிருத்திகையில் பிறந்தவர். தமிழ்நாட்டில் மிக உயர்ந்த பதவி வகித்து ஒய்வு பெற்ற பிறகும், அரசாங்கத்தின் பல கமிட்டிகளில் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்.

*மயிலையே கயிலை; கயிலையே மயிலை என்பதற்கேற்ப, மயிலாப்பூரில் வசித்து வந்தார்.*

சென்னையில் இருக்கும் நாட்களில், இரவு கபாலிஸ்வரர் கோவிலில் தீபாராதனை முடிந்த பின்பே உணவு உட்கொள்ளும் வழக்கம் உடையவர். இந்தியா முழுவதும் அவர் போகாத ஊர் இல்லை, வணங்காத கோவிலும் இல்லை. ஆகச் சிறந்த நேர்மையாளர் பண்பாளர்.. தான் வகித்து வந்த பதவிக்கு கௌரவம் சேர்த்த மாமனிதர்.

சென்ற *3.11.2019* அன்று கபாலி கோவிலில் சுப்ரமணிய சுவாமியின் திருக்கல்யாண வைபவம். தன் மனைவியுடன், நடந்தே கபாலீஸ்வரர் கோவிலுக்கு செல்கிறார். கபாலியை தரிசித்துவிட்டு, கற்பகாம்பாளை தரிசித்துவிட்டு பாலசுப்ரமணிய சுவாமி சந்நிதிக்கு வருகிறார். தீபாராதனைக் காட்டப் படுகிறது. பிரசாதம் வழங்கபடுகிறது. கண் குளிர முருகனை தரிசிக்கிறார். முருகனின் முன்னே மயில் வாகனம் அதன் அருகே நிற்கிறார். சட்டென்று மயில் மீது சரிகிறார்.

*அப்புறம்? அப்புறம் என்ன? "பகவானை பாத்துண்டே என்*

*பிராணன் போகணும்" என்றும்*

*"கபாலி கண் முன்னே நான் இறக்கணும்" என்றும் பல சமயங்களில் தன் ஆசையை வெளிப்படுத்தி வந்த அந்த புண்ணிய ஆத்மா... தனது 77 வயது வரை எந்த மருத்துவமனைக்கும் செல்லாமல் மருந்துகள் எதுவும் உட்கொள்ளாமல், திடகாத்திரமான நபராக இருந்த அவர், சட்டென்று தனது பயணத்தை முடித்துக் கொண்டதை என்ன என்று சொல்ல?*


*ஒரு வலி இல்லை, வேதனை இல்லை, 'ம்' என்ற முனகல் இல்லை.. செயற்கை சுவாச கருவி இணைக்கப்படவில்லை. வாழ்நாள் முழுவதும் கபாலிஸ்வரரை தரிசித்து வந்த கண்கள் அந்த கோவிலிலேயே கண்களை மூடியதை எவ்வாறு விவரிக்க.*

*நீதியரசர் என்.வி. பாலசுப்பிரமணியத்தின் புண்ணிய வாழ்வை வேறு எப்படி எழுத?*

*லட்சுமி நடராஜன்*

*திருப்பூர்*

*1. பாரதியார் 2. ஹரிஹரன் (ஐய்யப்பன்)*
*3. பாம்பன் ஸ்வாமிகள்*
*4. முருகன் 5. அருணகிரிநாதர்*
*6. குமாரசம்பவம் 7. நம்மாழ்வார்*
*8. திரிசடை 9. இந்திரன்*
*10. அயர்லாந்து*



தொகுப்பு
**பரிதி**

**வேதபாரதி வழங்கும்**
**மயிலாடுதுறை அந்தணர் சங்கமம்**
*நாள் :*
**22.12.2019 ஞாயிற்றுக்கிழமை**
*காலை 9.00 மணி முதல்*
*மாலை 6.00 மணி வரை*
*இடம் :*
**அபிராமி கல்யாண மண்டபம்**
*அனைவரும் வருக! வருக!*



# வேதபாரதியின்
# பிடி அரிசி திட்டம் - ஊரப்பாக்கம்

*ஸ்ரீஸ்ரீ மஹா சுவாமிகளின் ஆசியோடும், ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதி வேதபாரதி ஆன்மீக அன்பர்களின் ஒத்துழைப்புடன் "பிடி அரிசி திட்டம்" 27.11.2019 அன்று வேதபாரதியின் செயல் வீரர்கள் திரு.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. சந்திரசேகரன் ஆகியோர்களின் முயற்சியால் "அனுஷ" நட்ஷத்திர திரு நாளில் தொடங்கப்பட்டது.*




*தொடக்க பூஜையில் சுமார் 20க்கும் மேற்பட்ட வேத பாரதி குடும்பத்தார்கள் கலந்து கொண்டனர். சுமார் 50 அட்ஷய பாத்திரம் ஏற்பாடு செய்யப்பட்டு ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்பட்டு ''பிடி அரிசி'' சேமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அனைவரும் ஆர்வமாக இந்த கைங்கர்யத்தில் பங்கு பெற இருக்கிறார்கள். தொடர்ந்து இத்திட்டத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

*கிடைக்கும் அரிசி அருகிலுள்ள பாடசாலைகளுக்கும் கோவில்களில் நடக்கும் அன்னதானத்திற்கும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொறுப்பாளர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, ஊரப்பாக்கம் - 9840838378.*

**வேதபாரதி**

மற்றும்

**ஸ்ரீ சங்கரா எஜூகேஷனல் ட்ரஸ்ட் இணைந்து நடத்தும்**






# பாவை விழா 2020

**நாள் :**
**5.01.2020 ஞாயிறு**
**காலை 8.30 மணி**
**முதல் 12.30**
**மணி வரை**

இடம் :
**ஸ்ரீ சங்கர வித்யாலயா**
**வளாகம்**, சேலையூர்,
கிழக்கு தாம்பரம்

**50க்கும் மேற்பட்ட பள்ளிக்குழந்தைகள் 500 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.**

| | | |
|---|---|---|
| 9.30 - 11.30 | | ஒப்புவித்தல் போட்டி |
| 9.30 - 11.30 | : | இசைப்போட்டி |
| 11.30 - 12.00 | : | மேடையில் சிறப்பு மனப்பாட போட்டி |
| 12.00 - 12.30 | : | பரிசளிப்பு - பாராட்டு |
| 1.00 மணி | : | மதிய உணவு |





G. SIVAGAMASUNDARI
99940 89133




N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals, Tiffin & Marriage Sear Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**


# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **17.12.2019 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**01.12.2019, ஞாயிற்றுக்கிழமை**
**மேலையூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு**
**பெரியநாயகி அம்பாள்** உடனுறை
**நாகபரணீஸ்வரர் திருக்கோயிலில்**